தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௭ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௨ | மலர் ௮

கா—கார்த்திகை

1951—நவம்பர்

தமிழ்த்தாய் வாழ்க.

கரந்தைத் தமிழ் சங்கம், தஞ்சாவூர்

கலைமகள் விழா, முத்தமிழ் விழா.

1951, அக்டோபர், 9, 14—23

திருவருள் வளத்தால் நிகழும் திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௨, புரட்டாசித் திங்சள், ௨௰௩-ஆம் நாள் (9—10—51) செவ்வாய்க்கிழமை கலைமகள் விழாவும், ௨௰௮ ஆம்நாள் முதல் முத்தமிழ் விழாவும் பேரார்வத்துடனும் பெருஞ் சிறப்புடனும் நிகழ்ந்தன. அக்டோபர், 9 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை கலைமகள் வணக்கமும் தமிழ்த்தாய் வணக்கமும் தண்டமிழ்த் தொண்டர்களால் உளங் கனிந்த அன்புடன் நடைபெற்றன.

அக்டோபர், 14 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை தொடங்கி முத்தமிழ் விழா நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் தமிழ் மக்கள் திரளாகக் கூடினர்; முத்தமிழ் வளர்ச்சியில் ஆர்வங் காட்டினர். அன்பர்கள் பலரும் தத்தம் ஆற்றலுக் கேற்பப் பணி புரிந்தனர்; உதவிசெய்தனர்; ஊக்கமும் உணர்வும்கொண்டனர். தொடக்க நாள் போலவே ஒவ்வொரு நாளும் நம் சங்க நிலையம் கண்கொள்ளாக் காட்சி யளித்தது. ஒவ்வொரு நாளும் மாலை 5-மணிக்குத் தொடங்கும் நிகழ்ச்சிகள் இரவு 12 மணிக்கு முன் நிறைவுற்றதில்லை. தமிழ் மக்கள் காட்டிய உணர்ச்சியும் ஊக்கமும் சங்கத்தார்க்குப் பெரு மகிழ்ச்சியும் எல்லையில்லா வீறும் தருகின்றன; எம் உணர்ச்சியை எழுப்புகின்றன. கற்றுத் துறைபோகிய இயல், இசை, நாடக வாணர்களை அழைத்துச் சிறப்புச் செய்தல் எங்கள் சிறந்த குறிக்கோளாகின்றது. அது போலவே அவர்களும் நம் தமிழ்ப் பெருமன்றம் ஏறிப் பணி யாற்றுதல் தமக்கு இணையிலாப் பேறும் சிறப்புமாகக் கருது

கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தமிழ்ப் பெருமன்ற மேடை ஏறியதும், தம்மையே மறந்த நிலையில் உணர்ச்சி மேலிட, நல்லிசை வழங்கியதாகக் கூறியது குறிப்பிடற்குரியது.

முத்தமிழ் முதல் திருநாள் – 14—10—51 ஞாயிறு–தஞ்சை மாவட்டத் தண்டல்நாயகர் (Dt. Collector) உயர்திரு. தி. கா. பழநியப்பன் அவர்கள் M. A., I. A. S., தலைமையில் அம்பலவாணர் திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. விழாத் தலைவர் சங்க முகப்பில் வந்து சேர்ந்ததும், சங்கத்தலைவர் முதலியவர்களும், தமிழ்ப் பெருமக்களும், நறுமண மாலை சூட்டி இன்னியம் கறங்க, அவருடன் வந்த பெருமக்கள் குழாத்துடன், தமிழ்ப் பெருமன் றத்துக்கு அழைத்து வந்தனர்.

இறை, தமிழ்த்தாய் வணக்கத்துக்குப் பின், சங்கத் தலைவர் முத்தமிழ் வள்ளல் இராவ்பகதூர் திரு. ஆ. யா. அருளானந்த சாமி நாடார் அவர்கள் முத்தமிழ் விழா அமைப்பு அதன் நோக்கம், முறை, முதலியவற்றை நன்கு விளக்கும்வகையில் முத்தமிழ் விழா வரவேற்புப் படித்துரைத்தார்கள். பின்னர் அற்றை நாள் தலைவரை வரவேற்கும் வரவேற்புப் பாவைக் கரந்தை புலவர் கல்லூரித் தலைவர் திரு. உ. பழநி அவர்கள், M. A., இன்னிசையுடன் படித்து விழாப் பெயரின் சிறப்பை விளக்கினார்கள். கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய், கேளாரும் வேட்ப, தலைவரவர்கள் இலக்கிய ஆய்வுக் கருத்துக்கள் முத்தமிழ் வளர்ச்சிக்கான குறிப்புக்கள் நிறைந்த தம் முன்னுரையை நிகழ்த்தி, சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி திரு. S. ஆறுமுக முதலியார் M. A., L. T., B O. L. அவர்களை " முத்தமிழ்ச் செல்வம் " என்னும் பொருள்பற்றிப் பேச அழைத்தார்கள்.

திரு. S. ஆறுமுக முதலியார் அவர்கள் குறித்த நேரத்திற்குள் அரும் பெரும் கருத்துக்கள், மேற்கோள்கள், உவமைகள் கொண்ட தம் முத்தமிழ்ச் செல்வச் சொற்பொழிவை நிகழ்த்தி முடித்தார்கள்.

தலைவர் நம் தண்டல் நாயகர் அவர்கள், மேலுரையாக நம் சங்கத்தின் தமிழ்த்தொண்டு, பணிகள், அவற்றின் சிறப்பு, இம் முத்தமிழ் விழாவின் இன்றியமையாமை முதலியவற்றைத் தொகுத்துச் சிறந்த பேருரை ஒன்று நிகழ்த்தினார்கள்.

---

* ஒவ்வொரு நாளும் இறை, தமிழ்த்தாய் வாழ்த்துக்கள், நாட் சிறப்பு விளக்கம், வரவேற்புரை இவற்றுடன் விழா தொடங்கியது.

அடுத்து, சென்னை கர்னாடக நடுஇசைக் கல்லூரிப் பேரா சிரியர் உயர்திரு. திருப்பாம்பரம் T. சாமிநாத பிள்ளை அவர்கள் அன்னார் மாணவர் திரு. விசுவநாதம் B.A., (Hons) அவர்களுடன் திருவீழிமிழலை திரு மீனாட்சிசுந்தரம் பிள்ளை கின்னரி இயக்க, தஞ்சை திரு. சிவப்பிரகாசம் பிள்ளை முழவு அதிர்க்க, வேய்ங் குழல் இன்னிசை வழங்கினார்கள். பின்னர் தஞ்சை பிச்சைய பிள்ளை ஆடற் சாலையில் திருமதி. இலக்குமிகாந்தத்தால் நடனப் பயிற்சி செய்விக்கப் பெற்றுள்ள செல்வி லலிதா சுப்பிரமணியத் தின் நடன அரங்கு நிகழ்ந்தது. நன்றி. வாழ்த்துடன் முத்தமிழ் முதல் நாள் விழா நிறைவேறியது.

அடுத்தநாள் விழா 15—10—51 திங்கள் ; இரண்டாவது விழா அப்பாசாமி வாண்டையார் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது.

திரு. S. ஆறுமுக முதலியார் M. A., B. O. L. L. T., அவர்கள் தலைமை ஏற்றார்கள்.

தலைமையுரைக்குப் பின் திருக் குடந்தை நகராட்சி உயர் நிலைப் பள்ளித் தலைவர் உயர்திரு. S. சுந்தரேசச் செட்டியார் B. A, L. T., அவர்கள் 'சமயமும் முத்தமிழும்' என்னும் சிறந்த பொருள்பற்றி அரியதொரு விரிவுரை யாற்றினார்கள்.

பின்னர் நம் சங்கக் கல்வி நிலையங்களின் முன் மாணவர் திரு. தங்கவேலுப் பிள்ளை யவர்களின் இன்னிசை அரங்கு நிகழ்ந்தது. நன்றியுரையுடன் அற்றைநாள் விழா நிறை வேறியது.

மூன்றாம் நாள் விழா – 16—11—51 செவ்வாய் – இராதா கிருட்டினர் திருநாளாகக்கொண்டாடப்பெற்றது. அன்றுதஞ்சை மாவட்ட நீதிபதி (Dt. & Sessions Judge) திரு. K. சீனிவாசன் அவர்கள் I. C. S. தலைமை ஏற்றார்கள். தலைவர் அவர்கள் முன் னுரைக்குப் பின் போடிநாயக்கனூர் புலவர் திரு. கான்முகமது அவர்கள் 'மணிமேகலையின் துறவு' என்னும் பெரும் பொருள் பற்றிப் பேசி முடித்தார்கள்.

முத்தமிழ் விழாவிற்கே அருமையும் பெருமையும் தேடித் தரத்தக்க வகையில் இன்னிசை வழங்குவதற்குக் கொடுமுடி ஏழிசை வல்லபி, யாழ் மொழிச் செல்வி, திருமதி. K. B. சுந் தராம்பாள் அவர்கள் வந்திருந்தார்கள். அவர்களுடன் கின்னரி இயக்க திரு. M. N. கணேசம் பிள்ளை யவர்களும், முழவு அதிர்க்க, திரு. தட்சணாமூர்த்தி ஆசாரியாரும், மட்கல ஒலி

பெழுப்ப ஆலங்குடி திரு. இராமச்சந்திரன் அவர்களும் கைப் பறை சாற்ற திரு, மாரிமுத்தா பிள்ளை யவர்களும் மேடைமீது அமர்ந்தனர். யாழ் மொழிச் செல்வியாரையும், அன்னார் அம்மான் திரு. மலைக் கொழுந்து அவர்களையும், துணை இசை வாணர்களையும், ஏற்றமுறையில்விழா அமைப்பாளர் வரவேற்று முகமன் கூறி மாலை யணிவிக்க 'பாலுந் தெளிதேனும்', என்ற பாடலுடன் தொடங்கிய இசை யரங்கு முற்றிலும் தேனும் பாலும் கலந்த ஒரு மழையாகவே 'புள்ளும் மாவும்' தன் வலைப் படும் வகையில் பெய்தது. அரும் பெரும் தமிழ்ப் பாடல்கள், பற்பல; சங்க நூற் பகுதிகள் பல, பிள்ளைத் தமிழ், திருப்புகழ், முதலிய செந்தமிழ்ப் பாக்களுடன் அவையோர் ஐந்து பேரறிவும் செவிகளே யாகத் தம்மையே மறந்த நிலையில் இசை யின்பத்தில் மூழ்கி மிதக்க, ஏழிசை வல்லபியாரும், தம் மெய்யுணர்வில் ஆழ்ந்த வண்ணமே பல நாழிகை இருந்து இசை வழங்கி 'ஆறிரு தடந்தோன் வாழ்க.........வாழ்க சீரடியா-ரெல்லாம்' என்ற வாழ்த்துடன் தம் இசை யரங்கை நிறை வேற்றினார்கள். சங்கத்தார் அவர்கட்கு என்றும் மாறா நன்றி கூறிப் பிரியா விடை அளித்தார்கள்.

நான்காவது நாள் விழா 17–10–51 புதன்: உமாமகேசுவரர் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. அற்றை நாள் தலைமை ஏற்க இசைந்திருந்த நம் சங்க அன்பரும் தஞ்சை மாவட்ட நாட் டாண்மைக் கழகத் தலைவரும் இந்தியப் பாராளுமன்ற உறுப்பி னருமாகிய உயர்திருவாளர் V. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் உடல்நலங் காரணமாக வர இயலாமையால் நம் சங்கத்தலைவர் திரு. ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்கள் தலைமை ஏற் றருளினார்கள்.

தலைவர் அவர்கள் முதலுரையாக பல அரிய செய்திகளைக் கூறி அற்றைநாள் பேருரையாளராக வந்திருந்த சென்னைப் பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் உயர்திரு. A. S. ஞானசம்பந்தம் M. A., அவர்களை "இசையும் பொருளும்" என் னும் பொருள்பற்றி விழாப் பேருரை நிகழ்த்த அழைத்தார்கள் அன்பர். திரு. A. S. ஞானசம்பந்தம் அவர்களும் தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை திருநாளில் பேசும் பேறு கிட்டி யது பற்றியும், தமக்குப் பேச வாய்த்த சொற்பொருள் சிறப்புப் பற்றியும் வெகுவாக எடுத்துரைத்து, இசைவளமும், பொருட் செறிவும் நிறைந்த தம் பேருரையை, அறிஞர் போற்றும் வகை யில் நிகழ்த்தினார்கள்.

பின்னர் சென்னை திருமயிலை திருவாளர் T.C. கிருட்டினசாமி பிள்ளை யவர்கள் பேர்த்தியும் திருவாளர் பஞ்சாபகேசம் பிள்ளை

யவர்கள் திருவளர் செல்வியுமாகிய குழந்தை நடனகலாவல்லி (தாராபாய் என்னும்) மணிமேகலையின் அரிய ஆடல் நிகழ்ந்தது. ஆடல் முன்னுரையில் விழா அமைப்பாளர், சென்னையிலிருந்து வந்திருந்த திரு. T. C. கிருட்டினசாமி பிள்ளை, திருவளர் செல்வி மணிமேகலை அக் குழந்தையின் ஆடல் ஆசிரியர் பின்னணி இசைக்குழாம், மின் விளக்கு, திரை, அமைப்பாளர்கள் முதலியவர்களை வரவேற்று முகமன் கூறி, சங்கத்தாருக்கு எவ்வித பொறுப்பும் இன்றி நிதானமாக ஓராயிரம் வெண் பொற் காசுகளுக்கு மேலாகும் தம் தனிச் சொந்தப் பொறுப்பி லேயே இந்த ஆடல் நிகழ்ச்சியை அமைத்துச் சங்கத்திற்கு ஒரு உயர் தொண்டாக உதவிய திரு. T. C. கிருட்டினசாமி பிள்ளை யவர்களுடைய வள்ளண்மையையும் தமிழ் மகனுர்க்குரிய அவருடைய உயர் பண்பையும் நன்கு எடுத்துக் கூறி அனைவர்க் கும் நல்வரவு கூறினர்,

பின் குழந்தை மணிமேகலையின் அரிய ஆடல், இறைவனைப் பூசனை செய்யும் தோற்றத்துடன் தொடங்கி, பலநாழிகை நேரம் நிகழ்ந்தது. குழந்தையின் ஆடல் ஆடைகள், அணிகள் முதலியன வெகு சிறப்பாகவும் உயர்ந்த செலவிலும் அமைந்திருந்ததையும் அதனை அக் குழந்தைக்கு ஆக்கி அமைத்திருந்த பாட்டனுரையும் அவையினர், (சிறப்பாக மகளிர் பகுதியில் இருந்தவர்கள்) பல படியாய் புகழ்ந்து பாராட்டினர்கள்.

ஆடலைக் கண்டு மகிழ்ந்த தமிழ் மக்கள் பலர் குழந்தைக்கு பொற் பதக்கங்கள், வெண்பொற் பொருள்கள், பட்டாடைகள், பொருட் பரிசு முதலியவற்றை சங்கத்தார் வழியாகச் சங்க மேடையிலேயே வழங்கினர்கள்.

சங்கத்தார் குழந்தைக்கு வாழ்த்தும், குழந்தையின் ஆசிரியர் பாட்டனுர் முதல் பலர்க்கும் நன்றியும் கூறித் தமிழ்ப் பெரு மன்றத்தின் சிறப்பால் நடனகலாவல்லி மணிமேகலை, ஆடல் துறையில், மேலும் திருந்திய பயிற்சி பெற்று, சிறந்த தக்க உயர்ந்த நடனங்களை ஆடி, தமிழ் ஆடல் துறைக்கே ஒரு தலைவி யாகப் பல்லாண்டு வாழ வேண்டுமென்று வாழ்த்தி அக் குழந் தைக்கு சங்கத்தார் செய்யும் சிறப்புப் பட்டமளிப்பு பரிசளிப்பு விழாவன்று நிகழும் என்று குறிப்பிட்டார்கள்.

ஐந்தாவது நாள் திருவிழா 18-10-51 வியாழன்: குமரசாமி யார் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. அற்றைநாள் தலைமை ஏற்க வேண்டிய திருமதி புட்பம் நடராசன் அவர்கள் வர இயலாமையால் திரு. கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் தலைமை ஏற்றுர்கள்.

இறை வாழ்த்து தலைவர் முன்னுரைக்குப் பின் மொழியரசி யாசிரியர் திரு. சாமி. வேலாயுதம் பிள்ளையவர்கள் பரிமேலழகர் சிறப்பு என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள்.

அடுத்து மதுரை ரஞ்சிதகான சோமசுந்தரம் பிள்ளையவர்கள் இன்னிசை யரங்கு நிகழ்ந்தது.

திரு. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் தம்முடைய இனிய குரலில், தமிழர்க்குரிய பெருமிதம், வீரம், கலைப்பற்று முதலியவற்றை தூண்டக் கூடிய அரும்பெரும் தமிழ்ப்பாடல்கள் பலவற்றைப் பாடி மகிழ்வித்தார்கள். இற்றைநாள் இளம் இசைப் புலவர்களுள் ஒருவராகிய இவர் வருங்காலத்தில் இசைப்புலவர் தலைவராக விளங்குவார்கள் என்றும் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டமைபற்றி நன்றியும் சங்கத்தின் வாழ்த்தும் கூறி அவர்கள் நம சங்கத்தின் அரிய உறுப்பினராக என்றென்றும் விளங்கி இசைத் தொண்டும் தமிழ்த் தொண்டும் புரிய வேண்டும் என்று இறைவனை வாழ்த்திச் சங்கத்தார் நன்றி கூறினார்கள்.

ஆறும் நாள் திருவிழா 19—11—51 வெள்ளி : நாட்டார் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது.

தஞ்சைமாவட்டத் தண்டல்நாயகர் துணைவர் திரு. G. முத்துசாமி பிள்ளையவர்கள் தலைமை ஏற்றார்கள்.

தலைவரவர்கள் முன்னுரைக்குப் பின் சென்னைப் பல்கலைக் கழக ஆய்வாளர் திரு. துரை. அரங்கனார் அவர்கள் ‘ இலக்கியப் பண்பு ’ என்னும் பொருள்பற்றி அரும்பெரும் கருத்துக்கள் மேற்கோள்கள் கொண்ட ஆய்வுரை ஒன்று நிகழ்த்தினார்கள். பின்னர், இசைச் செல்வர் திரு. கீழ்வேளூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இன்னிசை யரங்கு நிகழ்ந்தது.

கின்னரி இயக்க, திருச்சி ஒலிபரப்பு நிலைய திரு. T. S சம்பந்தம் பிள்ளை யவர்களும், முழவு அதிர்க்க, திருக்கோகரணம் திரு. மீனாட்சிசுந்தரம் அய்யர் அவர்களும் துணை இசைவாணர். களாக அமர்ந்திருந்தார்கள்.

விழா அமைப்பாளர் இசையரங்கு முன்னுரையாக திரு. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களது தமிழ்ப்பற்று, இசை இலக்கணப்பற்று, தமிழ் இசைத் தொண்டு முதலியவற்றை எடுத்துக் கூறி அன்னார் இவ் விழாவில் கலந்துகொண்ட சிறப்பையும்

பாராட்டி வரவேற்று இசைவாணர் தாம் தமிழில் யாத்த பாடல் களையே பாடுவார்கள் என்று கூறி, துணை இசைவாணர் களான, திரு. T. S. சம்பந்தம் பிள்ளை யவர்களையும், திரு. மீனாட்சிசுந்தரம் அய்யர் அவர்களையும் முகமன் கூறி வரவேற்று மாலை அணிவித்தார்.

இசைவாணர் தமிழ் இசை இலக்கணச் சிறப்புடன் பாடி அற்றைநாள் விழாவைச் சிறப்பித்தார்.

அன்று இயல் பகுதி நிகழ்ச்சி நெடிது நீடித்தமையால் ஏற்பட்ட காலத் தாழ்வையும் கருதாது இசைவாணர் தம் மெய் வருத்தத்தையும் பாராது நடுநிசிக்குப் பின்னும் இன்னிசை வழங்கியது சிறப்பாகக் குறிப்பிடற் குரியது.

சங்கத்தார் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களுக்கு யாழ் நூல் ஒன்றைக் கையுறையாக வழங்குவதாகக் கூறினர். பின்னர் நன்றி யுரையுடன் ஆறும நாள் விழா நிறை வேறியது.

ஏழாம் நாள் திருவிழா, 20—10—51 சனி: சிவசிதம்பரம் பிள்ளை நாளாகக் கொண்டாடப் பெற்றது. செங்கரையூர் திரு. பொன்னண்ணு களத்தில்வென்ருர் அவர்கள் தலைமை ஏற்ருர்கள்.

அன்று இனம் க. த. ச. பு. கல்லூரித் தலைவர் திரு. உ. பழநி அவர்கள் M. A., 'தமிழர் கடமை' என்னும் பொருள் பற்றி அரிய விழாப் பேருரை நிகழ்த்தினுர்கள்.

அடுத்து, தஞ்சாவூர் திரு. T. S. நடேச அய்யர் அவர்கள் திருமகள் திரு. M. S. காந்திமதி, M. S. சாவித்திரி ஆகியவர்கள் இன்னிசை யரங்கு, தஞ்சை திரு, கோவிந்தராசலு பின்னரி இயக்க, திரு. ராஜம் அய்யர் முழவு முழக்க, பல நாழிகையளவும் நிகழ்ந்தது. இசையரங்கில் அரும் பெரும் தமிழ் பாடல்கள் இனிய குரலுடன் நன்கு பாடப் பெற்றன. பெருந் திரளான மக்கள் இசையின்பத்தில் மூழ்கினுர்கள்.

பின்னர் பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களின் ஆடற் பயிற்சி மாணவியும், மைசூர் முன்னுள் திவான் திரு. T. தம்புச் செட்டியார் மகனுர் திரு. துரை செட்டியாரின் பேர்த்தியுமான திருமதி சுலோசனுவின் அரிய நடனம், பந்தணைநல்லூர் திரு. முத்தைய பிள்ளை முதலான

வர்கள் துணை இசையுடன் நிகழ்ந்தது. தக்க திறமையுடனும், நல்ல பயிற்சியுடனும் நிகழ்ந்த ஆடல், ஆடற் கலை வல்லாரையும், திகைக்கச் செய்யுமாறு உயர்ந்த முறையில் நடைபெற்றது. அண்மையில்தான் பயிற்சிபெற்ற சுலோசனாவின் 'கன்னியாட்டத்தின்' கலைச் சிறப்பையும் ஆடல் திறனையும் பலர் ஏற்ற முறையில் போற்றினார்கள். அவ்வப்போதும் அவையினர் கரவொலி செய்து தம் பாராட்டை அறிவித்தார்கள். அற்றை நாள் இசையாளர்களையும், ஆடற் குழந்தையையும் பாராட்டி வாழ்த்திச் சங்கத்தார் நன்றி கூற ஏழாம் நாள் விழா நிறைவேறியது.

எட்டாம் நாள் திருவிழா – *21—10—51* ஞாயிறு, மறைமலையடிகள் திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. அன்று திருநெல்வேலி திரவியம் தாயுமானவர் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் திரு. இராவ் சாகிபு அருணாசலக் கவுண்டர் அவர்கள் தலைமை ஏற்றார்கள்.

சேலம் கல்லூரிப் பேராசிரியர் உயர்திரு. உலக ஊழியர் அவர்கள் "இலக்கியமும் இசையும்" என்னும் பொருள்பற்றி நீண்டதொரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். சொற்பொழிவின் இடையிலேயே தலைவர் திரு. அருணாசலக் கவுண்டர் விடைபெற்றுக்கொள்ளவே, தஞ்சை திரு. S. இராமச்சந்திரப் பத்தர் அவர்கள் B. A., தலைமை ஏற்றார்கள்.

சொற்பொழிவுக்குப்பின் அண்ணாமலைநகர் திருமதி வேதவல்லியின் இனிய இசையரங்கு நிகழ்ந்தது. விழாத் தலைவர் திரு. பத்தர் அவர்கள் இசைச் சிறப்புப்பற்றி தக்க முன்னுரை வழங்க, விழா அமைப்பாளர் இசையாளர்களை வரவேற்றார். அன்று விழா, சற்று நேரம் தாழ்ந்துத் தொடங்கியமையாலும், இசையரங்கு, அவையினர் வேண்டி விரும்பிய நாழிகை நிகழ்வதற்கில்லை.

இசையாளர்க்கும் இரு தலைவர்கட்கும், சொற்பொழிவாளர்க்கும் விழா அமைப்பாளர் நன்றி கூற விழா நிறைவேறியது.

ஒன்பதாம் நாள் விழா – *22—10—51* : திங்கள் ஞானியார் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. அன்று திருவையாறு அரசர் தமிழ்க் கல்லூரித் தலைவர் திரு. ப. திருஞானசம்பந்தம் அவர்கள் M. A., L. T., தலைமை ஏற்றார்கள்.

(244 ஆம் பக்கம் பார்க்க.)

பரத சாத்திரம்.

மூன்றுவது
தாளவியல்.*

தகாரமே ருத்திரனுஞ் சார்ந்த ளகாரம்
பகருகின்ற பார்வதியாம் பன்னும்—மகரவொற்றே
மாலாம் அகாரமே மன்பிரம மாகுமென்றே
சேலார் விழியாய் தெரி.

(இ-ள்.) தாள மென்னும் பதத்தின் மூன்றக்கரத்துள் தகரவொற்று-உருத்திரன், ளகரவொற்று-பார்வதி, மகரவொற்று-விஷ்ணு, தகர ளகரங்களில் ஏறி நின்ற அகரவுயிர் நாத சுவரூபமாகிய பிரமமாம்—எ-று. (க)

---

* தாளத்தின் இயல்பினை விரித் துரைப்பது தாள வியலாகும். இரண்டு கைகளின் சேர்க்கையாலும் பிரிவாலும் தாளம் உண்டாகின்றது.

'கொட்டும் அசையுந் தூக்கும் அளவும்
ஒட்டப் புணர்ப்பது பாணியாகும்'

என்பது அடியார்க்குநல்லார் காட்டிய பழஞ் சூத்திர மாகும். இதன்கண் பாணி யென்றது தாளத்தினை. கொட்டு அரை மாத்திரை. அசை ஒரு மாத்திரை, தூக்கு இரண்டு மாத்திரை. அளவு மூன்று மாத்திரை. இம் மாத்திரைகளின் வடிவமாக முறையே க, எ, உ, ஃ என்னும் எழுத்துக்கள் வழங்கின என்பது, 'ககரங் கொட்டே எகரம் அசையே, யுகரந் தூக்கே அளவே ஆய்தம்' என்ற சூத்திரத்தால் விளங்கும். கொட்டு—அமுக்குதல், அசை—தாக்கி யெழுதல், தூக்கு—தாக்கித் தூக்குதல், அளவு—தாக்கின ஓசை மூன்று மாத்திரை பெறுமளவும் வருதல், என இவற்றின் தொழில்களை அடியார்க்கு நல்லார் விளக்குவர்.

பண்டை நாளில் தமிழகத்து வழங்கிய தாளவகை யோத்து முதலிய தமிழ் நூல்களில் தாள விலக்கணம் விரித் துரைக்கப் பட்டிருந்தன. அந் நூல்களை இழந்தமை வருந்துதற் குரியதாம்.

"சச்சபுட முதலான பஞ்ச தாளமும், அரை மாத்திரையுடைய ஏகதாள முதலாகப் பதினாறு மாத்திரையுடைய பார்வதி

தத்தத்தீர் தோந்தமெனத் தாண்டவஞ்செய் இன்றசபை
அத்தர்முக மைந்தனிட மாமுறையே—உற்கடிதம்
சம்பத்து வேட்டமுடன் சட்பிதா புத்திரிகம்
சச்சபுடஞ் சாசபுட மாம்.

(இ-ள்.) தத் தத் தீந் தோமென்று தாண்டவ மாடுஞ் சபாநாதருடைய ஈசான முகத்தில் உற்கடிதமும், தற்புருட முகத்தில் சம்பத்து வேட்டமும், அகோர முகத்தில் சட்பிதா புத்திரிகமும், வாம முகத்தில் சச்சற் புடமும், சத்தியோசாத முகத்தில் சாசற் புடமும் தோன்றும்—எ-று. (உ)

வேறு நூலோர் சத்தியோசாத முகத்தில் சச்சற் புடமும், வாம முகத்தில் சட்பிதா புத்திரிகமும், ஈசான முகத்தில் உற்கடிதமும், தற்புருஷ முகத்தில் சம்பத்து வேட்டமும் தோன்று மென்பர்.

ஏர்மேவு மாதிதா ளத்துடனே யேதமறு
பார்மேவு பாரிதன் லோசனமும்—சீரார்
குடுக்கமுடன் சிங்கணந்தங் கூறுதிரி மாத்ரை
அடுக்கவரு மைந்துமுப மாம்.

(இ-ள்.) ஆதி தாளம், பார்வதிலோசனம், குடுக் கம், சிங்கணந்தம், திரிமாத்திரை யென்னும் ஐந்து தாளங்களும் முற் கூறிய தாளங்களுக்கு உபதாளமா மென்றும், முறையே முற் கூறியவாறு பரமசிவன் முகங் களிற் றோன்று மென்றுங் கூறினர்—எ-று. (ந)

லோசன மீருகச் சொன்ன ஈரற்பத்தொரு தாளமும், ஆறன் மட்டம், எட்டன் மட்டம் என்பனவும், தாளவொரியல், தனிநிலை யொரியல் என்பனவும், ஒன்றன் பாணி முதலாக எண் கூத்துப் பாணி யிறுதியாகக் கிடந்த பதினொரு பாணி விகற்பங்களும் முதனடை வாரம் முதலாயினவும்'' பண்டை நாளில் தமிழ் நாட்டில் வழங்கிய தாளங்களாகச் சிலப்பதிகார வுரையாசிரியர் களால் குறிப்பிடப்பெற்றுள்ளன. ஒரு தாளத்தின் முதல் எடுக்குங் காலம் பாணி யென்றும் அத் தாளத்தினிடையே மிகமுங் காலம் தூக்கு என்றும் அத் தாளம் முடிந்துவிடுங்காலம் சீர் என்றும் நச்சினார்க்கினியர் கலித்தொகைக் கடவுள் வாழ்த்துப் பாட்டு வுரையில் விளங்கக் கூறியுள்ளார்.

அங்க முபாங்க மாகிமுனேர் பங்கமுடன்
பொங்கு விபாங்கம் புனிதசுத்தம்—தங்கும்
அனுதான மென்ன வறைகுவா ருகப்
பனுவலுணர் பாவலர்க டாம்.

(இ-ள்.) அங்க தாளம், உபாங்க தாளம், பங்க தாளம், விபாங்க தாளம், சுத்த தாளம், அநு தாளமென ஆறு விதமாகக் கூறுவர்—எ-று. (௪)

துருவ மடதாளஞ் சொல்லேக தாளம்
திரிபுடையு ரூபகமே சம்பை—பொருவரிய
மட்டியத்தோ டேழா வகுப்பரே மாபரதம்
ஒட்டி யுணர்புலவ ரோர்ந்து.

(இ-ள்.) சிலர் துருவ தாளம், அடதாளம், ஏக தாளம், திரிபுடை தாளம், உரூபக தாளம், சம்பை தாளம், மட்டிய தாளம் என ஏழு விதமாகக் கூறுவர் —எ-று. (௫)

அருமஞ் சமஞ்சித்ர மாநிவர்த்த நல்ல
துருவஞ் சயம்படிமந் தூய—விடமோ
டரிதாளந் தன்னுடனே யாருமொன்பா னாகத்
தெரிந்துரைத்தார் மாபரதந் தேர்ந்து.

(இ-ள்.) சிலர் அருமதாளம், சமதாளம், சித்திர தாளம், நிவர்த்த தாளம், துருவதாளம், சயதாளம், படிமதாளம், விடதாளம், அரிதாளம் என ஒன்பது விதமாகக் கூறுவர்—எ-று. (௬)

சச்சபுடத் தாளமுதற் சாற்றுபெத் தாபரணத்
துச்சமநு தாளவரை சொற்றவொரு—உச்சிதமாம்
நூற்றெட்டுப் பேதமுள தென்றுரைக்குந் தாளத்தை
ஆற்றபெரு நூலதனு ளாய்.

(இ-ள்.) சச்சற்புட முதல் பெத்தாபரண மீறாகக் கூறிய நூற்றெட்டுத் தாள பேதங்களை மகா பரத நூலுட் கண்டு கொள்க—எ-று. (எ)

சில நூலோர் நூற்றெருரு பேத மென்பர்.

தாள சாதி[1]

சச்சற் புடமாதி சாற்றுமோ ரைந்திலுமே
மெச்சு மறையோர் மிகுமரசர்—இச்சை
வணிகர் பூ பாலர் வருசங் கரகுலத்தோர்
அணியாகக் கொள்கென் றறை.

(இ-ள்.) சச்சற் புடம் பிராமண சாதி, சாசற்புடம் அரச சாதி, சட்பிதா புத்திரிகம் வைசிய சாதி, சம்பத்து வேட்டம் சூத்திர சாதி, உற்கடிதம் சங்கர சாதியாம் —எ-று. (அ)

தாள நிறம்—அதிதேவதை

தாளமோ ரைந்துமுன் சாற்று முறைப்படியே
ஆளுசெம்மை பொன்மைவெண்மை யாங்கருமை-நீள்கலப்பாம்
ஈசன்மால் வேதன் இமவான் மகள்பானு
ஆசிலாத் தேவென் றறை.

(இ-ள்.) சச்சற்புட மாதியான தாளங்கள் முறையே சிவப்புநிறம், பொன்னிறம், வெள்ளைநிறம், கறுப்புநிறம், பல வர்ணங்கள் ஆம். இவற்றின் அதி தேவதைகள் முறையே பரமசிவன், விஷ்ணு, பிரமன், பார்வதி, சூரியன் ஆம்—எ-று. (௯)

இப்பனுவ லைந்துகண்ட மேயவனி காபதமும்
வைப்பரிய கைப்பிடித்த மானமாம்—செப்பிலதை
விட்டமா னந்தானு மேலு முபரிசதி
விட்டவா மத்தனையு மே.

(இ-ள்.) தாளப் பிரபஞ்சம்—அவனிகாபதம், கைப் பிடித்த மானம், கைவிட்ட மானம், உபரிசதி, விட்ட மானம் என்னும் ஐந்தாம். இவற்றின் இலக்கணம் பெரு நூலிற் காண்க—எ-று. (௰)

---

1. பிற் காலத்தில் மக்களிடையே வந்து புகுந்த சாதிப் பாகுபாடு இசை நாடகம் முதலிய கலைத் துறையிலும் இடம் பெற்றமை வருந்தத்தக்கதாம்.

பூபாலர்—நிலத்தைப் பண்படுத்தும் வேளாளர்.
சங்கரகுலத்தார்—கலப்பினத்தவர்.

க-வது. சச்சற்புடம்

சச்சற் புடமே குருலகு புலுதம்
வச்சிடு முறையே யீரண்டுமோவ் வொன்றமாம்.

(இ-ள்.) சச்சற்புடத்துக்கு—குரு-உ, இலகு-க, புலுதம்-க, ஆக மாத்திரை அ--எ-று. (கக)

உ-வது. சாசற்புடம்

சாசற் புடமே குருலகு குருவாம்
ஒன்றிரண் டொன்றென வுரைத்தனர் புலவர்.

(இ-ள்.) சாசற்புடத்துக்கு—குரு-க, இலகு-உ, குரு-க, ஆக மாத்திரை கூ—எ-று. (கஉ)

ங-வது. சட்பிதாபுத்திரிகம்

சட்பிதா புத்திரிகம் புலுதம் லகுகுரு
இலகுவொடு புலுத மாகு மைந்தனுள்
குருவிரண் டல்லன வொவ்வொன் றாகும்.

(இ-ள்.) சட்பிதாபுத்திரிகத்துக்கு — புலுதம்-க, இலகு-க, குரு-உ, இலகு-க, புலுதம்-க. ஆக மாத்திரை கஉ—எ-று. (கங)

ச-வது. சம்பத்து வேட்டம்

சம்பத்து வேட்டம் புலுதங் குருவுடன்
புலுதம் மூன் றனுள் குருமுன் றேனைய
ஒவ்வொன் றென்றே யுரைத்தனர் புலவர்.

(இ-ள்.) சம்பத்து வேட்டத்துக்கு — புலுதம்-க, குரு-ங, புலுதம்-க, ஆக மாத்திரை கஉ—எ-று. (கச)

ரு-வது. உற்கடிதம்

உற்கடி தங்குரு மூன்றென வுரைப்பர்.

(இ-ள்.) உற்கடிதத்துக்கு—குரு-ங ஆகும். ஆக மாத்திரை சூ—எ-று. (கரு)

ஆதி தாள மாதியா வறைந்த
நிதிலேர் நிற்குமேற் செப்பிய முறைமையே
மாத்திரை யதனை வகுத்தனர் கொளலே.

(இ-ள்.) ஆதி தாள மாதியாகச் சொன்ன உப தாளங்களுக்கு முற் கூறிய முறையே மாத்திரையும் அங்கங்களுங் கொள்க.—எ-று. (கசு)

துருவ மாதியாச் சொற்றதா ளங்களின்
மாத்திரை சுரவகை வகுத்துரைப் பாமே.

(இ-ள்.) முன் சொன்ன துருவ மாதியாகிய சத்த தாளங்களுக்கும் மாத்திரைகளும், சுரங்களும் வகுத் துரைக்கின்றனம்—எ-று, (கஎ)

க-வது. துருவம்

துருவர் தனக்கு லகுகுரு துரிதம்
சரிகம கரி சரிகரி சரி கம வாம்.

(இ-ள்.) துருவத்துக்கு—இலகு-க, குரு-க, துரி தம்-க, ஆக மாத்திரை-கூ௨. சுரம்-சரிகம, கரி சரிகரி சரிகம—எ-று. (கஅ)

உ-வது. மட்டியம்

மட்டியர் தனக்கு லகுதுரி தம்லகு
சரிகரி சரி சரிகம விதன் சுரமே.

(இ-ள்.) மட்டியத்துக்கு — இலகு-க, துரிதம்-க, இலகு-க, ஆக மாத்திரை-உ௨. இதன் சுரம்-சரிசரி, சரி சரிகம—எ-று. (ககூ)

ங-வது. ரூபகம்

ரூபகர் தனக்கு லகுதுரி தம்மாம்
சரி சரிகம வெனுஞ் சுரமிதற் காமே.

(இ-ள்) உரூபகத்துக்கு—இலகு-க, துரிதம்-க, ஆக மாத்திரை-க௨. சுரம்—சரி சரிகம—எ-று. (உ0)

ச-வது. சம்பை

சம்பைக்கு லகுவநு துரிதந் துரிதமாம்
சுரம் சரிக சரி சரி கமா,

(இ-ள்.) சம்பைக்கு — இலகு-க, அநுதுரிதம்-க, துரிதம்-க, ஆக மாத்திரை-கஞ. சுரம்—சரிக சரி சரிகமா—எ-று. (உக)

ரு—வது. திரிபுடை

திரிபுடை தனக்குத் துரித மூன்றுடன்
அநுதுரி தம்மொன் றுமென வறைவர்
சரிக சரிகம வாமெனச் சாற்றுவர்.

(இ-ள்.) திரிபுடைக்கு-துரிதம்-ங, அநுதுரிதம்-க, ஆக மாத்திரை—கஞ. இதன் சுரம்—சரிகசரிகம—எ-று. (உஉ)

சு-வது. அடதாளம்

அடதாளத்திற் இலகொன்று துரித
மிரண்டுடன் லகுவொன் றுமென விசைப்பர்
சரிகா சாரிகா மாமா வாமே.

(இ-ள்.) அடதாளத்துக்கு—இலகு-க, துரிதம்-உ, இலகு-க, ஆக மாத்திரை—ங. இதன் சுரம்—சரிகா சாரிகா மாமா—எ-று. (உங)

எ-வது. ஏகதாளம்

ஏக தாளத்திற் இலகொன் றுமே
சரிகம வென்றே சாற்றிடு சுரமாம்.

(இ-ள்.) ஏகதாளத்துக்கு—இலகு-க, ஆக மாத்திரை-க. இதன் சுரம்—சரிகம—எ-று. (உச)

கால மார்க்கங் கிரியையோ டங்கம்
ஏலும் கிரகஞ் சாதி கலைலயை

யதிபிரத் தார மாமிவை பத்தும்
சதிபெறு தாளப் பிரமாண மாகும்.

(இ-ள்) காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, கலை, இலயை, யதி, பிரத்தாரம் என்னும் பத்துந் தாளப் பிரமாணமாம்—எ-று.[1] (உரு)

க-வது. காலம்

கணம் லவங் காட்டை நிமிடந் தொடியொடு
துரிதம் லகுகுரு புலுதங் காக
பதமெனும் பத்தும் காலத்தின் பகுப்பே.

காலத்தை விரித் துணர்த்துகின்றது.

(இ-ள்.) கணம், இலவம், காட்டை, நிமிடம், தொடி, துரிதம், லகு, குரு, புலுதம், காகபதம் என்னும் பத்தும் காலத்தின் பகுப்பாம்—எ-று. (உசா)

நூற்றித ழடுக்கி யோரித ழதனில்
தன்னூசி யூன்றிடு காலங் கணமாம்
கணமோ ரெட்டும் லவமெனப் படுமே
இலவமோ ரெட்டுக் காட்டைய தாகும்
காட்டை யெட்டே நிமிட மெனப்படும்
நிமிட மெட்டே துடியெனப் புகல்வர்
துடியோ ரிரண்டு துரித மாகும்
துரித மிரண்டே லகுவெனப் படுமே
இலகுவிரண் டதுவே குருவென மொழிப
இலகுவொரு மூன்றே புலுதம தாகும்
கொடிப்பதங்[2] குருவோ ரிரண்டெனக் கூறுவர்.

(இ-ள்.) தாமரைப் பூ விதழ் நூறடுக்கி ஓரிதழில் ஊசி செலுத்துங் காலம் கணமாம். கணம் (அ) கொண்டது இலவம். இலவம் (அ) கொண்டது காட்டையாம். காட்டை (அ) கொண்டது நிமிடமாம். நிமிடம் (அ)

---

1. இவை பத்தும் தாளத்திற்கு உயிர்நிலைகளாதலின் இவற்றைத் தாள தசப் பிராணன் என வழங்குவர்.

2. கொடிப்பதம்—காகபதம். கொடி யென்பது காகத்திற்கு ஒரு பெயர்.

கொண்டது துடியாம். துடி (உ) கொண்டது துரிதமாம். துரிதம் (உ) கொண்டது இலகுவாம். இலகு (உ) கொண்டது குருவாம். இலகு (௩) கொண்டது புலுதமாம். குரு (உ) கொண்டது காகபதமாம். —எ-று. (உஎ)

இதில் போந்த பொருள்—கிமிடம் அரை வீச மாத்திரை, துடி கால் மாத்திரை, துரிதம் அரை மாத்திரை, இலகு ஒரு மாத்திரை, குரு இரண்டு மாத்திரை, புலுதம் மூன்று மாத்திரை, காகபதம் நான்கு மாத்திரையாம். மாத்திரைக்கு அளவு—கண்ணிமைப் பொழுதும் கைந்நொடிப் பொழுதுமாம்.[1]

உ-வது. மார்க்கம்[2]

தக்கணமே வார்த்திகமே சாருமெழிற் சித்திரமே
மிக்கபெரு சித்ரதர மேயர்த்த—சித்ரமொடு
தொக்கவதி சித்ரமெனச் சொற்றதொகை யாறுமே
பக்கஞ்சேர் மார்க்கம் பகர்.

(இ-ள்.) மார்க்க மென்பது—தக்கணம், வார்த்திகம், சித்திரம், சித்திரதாம், அர்த்தசித்திரம், அதிசித்திரம் என்னும் ஆறும்—எ-று. (உஅ)

---

1. கண்ணிமை கைந்நொடி யவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறே
(தொல்—எழுத்.)

2. மார்க்கம்—மாத்திரையின் அறுவகைக் காலத்தைக் குறிப்பது. இதனை இக் காலத்தார் ஷட்காலம் என வழங்குவர். தக்கணம்—எட்டு மாத்திரை யளவுடைய முதற்காலம், வார்த்திகம்—நாலு மாத்திரை யளவுடைய இரண்டாங் காலம். சித்திரம்—இரண்டு மாத்திரை யளவுடைய மூன்றாங் காலம், சித்திரதாம்—ஒரு மாத்திரை யளவுடைய நாலாங் காலம். அர்த்தசித்திரம்—அரை மாத்திரை யளவுடைய ஐந்தாங் காலம். அதிசித்திரம்—கால் மாத்திரை யளவுடைய ஆறாங் காலம் இவற்றை இக் காலத்தார் முறையே 32, 16, 8, 4, 2, 1 மாத்திரைகளாகக் கொண்டு தொழில் செய்வர்.

தக்கண மாதியாச் சாற்றிய வாறும்
தொக்கவோ ரெட்டு நான்கிரண் டொன்றுடன்
அரைகால் மாத்திரை யாகுங் களையை
முறையே கொள்ளு மெனமொழிந் தனரே.

(இ-ள்.) தக்கண மாதியாகக் கூறிய மார்க்கம் ஆறும் முறையே தக்கணம் எட்டு மாத்திரை கூடிய களையையும், வார்த்திகம் நான்கு மாத்திரை கூடிய களையையும், சித்திரம் இரண்டு மாத்திரை கூடிய களையையும், சித்திரதரம் ஒரு மாத்திரை கூடிய களையையும், அர்த்த சித்திரம் அரை மாத்திரை கூடிய களையையும், அதி சித்திரம் கால் மாத்திரை கூடிய களையையும் பொருந்தும்—எ-று. (உகூ)

௩-வது. கிரியை[1]

கிரியை மார்க்கந் தேசிக மாமே.

(இ-ள்.) கிரியையாவது—தேசிகம், மார்க்கம் என இருவகைப்படும்—எ-று. (௩௰)

மார்க்க மோரெட் டாகு மவைதான்
நிசத்த நான்கு சசத்த நான்காம்.

(இ-ள்.) மார்க்கமாவது—நிசத்தம் நான்கும் சசத்தம் நான்கும் என எட்டாம்—எ-று. (௩க)

(தொடரும்.)

---

1. கிரியை—தாளத்தின் செய்கை முறை.

புலவர் தொழில்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி: துணர் உசு, மலர் ம, பக்கம் 336)

புலவர் தம் தொழிலுக்குப் பெருந் துணையாவது ஒழுக்கம் ஓம்பி, புலனடக்கி யாளுந் திறனாகும். புலனைவென்ற கூர்த்த அறிவாளியே புலவனாம். அறிவின்பத்தை அணிகலனாவுடைய புலவன் இயற்கைப் பொருட்களின் இயல் வனப்பின் உறவால் தம்முள்ளத்தை மலர்ப்பிக்க அவ்வுள்ளம் அன்பழகு கொண்டு அருள்வழி காட்டும் அறி வமுத ஊற்றாகும். தெள்ளறிவுண்மையை விளக்கவல்ல உள்ளத் துணர்வையும் பயிற்சியையும் வாழ்வில் இணைத்துக் காட்டவல்ல அருட்புலமை யுடையார், அறத்தால் செழிக்கும் இன்ப வாழ்வின் உயிர்க் கலையினையும் அழகினையும் விளக்கி நாட்டிற்கு நல்ல ஆக்கம் ஊட்டுவார். இத்தகையவாறு இயற்கை நுண்பொருட்களின் உறவில் உள்ளத்தை உட்கவியச் செய்து தமது இலக்கிய முடிபை களிப்புடன் நிறைவேற்றி வாழ்வியலையும் உலகியலறிவையும் தமிழ்ப் புலவர்கள் அருளியதினுன், தமிழர் நாகரீகம் நானிலத்து ஐந்திணை ஒழுக்கத்துப் பொருள்களிலேயே கருக்கொண்டு இன்பவியல்புடன் திகழ்ந்ததென்பது உணரத் தக்கது.

தெள்ளறிவெல்லாம் உள்ளத்தூற்றேயென உணரும் புலவர்கள், தாம் காணும் உலக இயற்கைப் பொருள்களின் அமைதியில் அன்பு செலுத்த, உண்மை அன்பு அன்னரது இயற்புலமையைப் பற்றி புல்லியற் பொருள்களைத் தாண்டி என்றுமுள்ள மெய்ப் பொருளினையே நாடும். இவ்வணம் கடவுட் கலப்புடன் வாழ்வின் உண்மைகளை உயர் நிலையினின்று சிந்தித்து வாழும் புலவர்களது பாட்டும் குரலும் மிக இனிமை பயப்பதாகும். இத்தகைய இனிமையில் படரும் உள்ளத்தறிவில் விளங்கிய உண்மையே உலக மக்களுக்கு உணர்வு நிலையை எழுப்பிச் செல்வப் பொலிவு தரும் தகைமை வாய்ந்தது. இஃதே சிரிய புலமையாக வயங்கி மனமுருகும் வண்ணம் மௌனமாக மக்களை அறிவு நிலையைப் பற்ற எல்லையற்ற உழைப்பிற்கு அழைத்து ஈடுமெடுப்பின்றி ஊடுருவி நிற்கும் இன்பத்தின் உயிர்நிலை நாடியினை வெளியிட வல்ல கவிதை யாகும். இயற்கையின் அமைதியில் மக்களது இதயத்தை மலரச் செய்து மனவுணர்வினை

எழுப்பி அறிவொளியும் அழகு நலமும் விளங்கித் தோன்ற மக்களைக் காதலாற்கலந்து சேர்க்கும் கருத்துடைய கவிதையின் நிலையில், சொல்லும் பொருளும் ஓசையுடன் ஒற்றுமைப்பட்டு ஒள்ளொளியுடன் சுரந்து பெருகும் இயல்பு எழுகின்றது. இத்தகைய அற்புத இயல்பினை யுடைய பாக்களெல்லாம் காதலில் முகிழ்த்திடுதலால், காதலென்பது நிலையறு வாழ்க்கையில் காதற் கணவனும் மனைவியும் முயக்கத்தால் காதலித்தே அழிகிற காதலில்லை. காதலென்பது நம்மைத் தாங்கி நடாத்தும் 'நான்' என இறுமாக்கும் ஆணவப் பிடியிலிருந்து விடுபட்டு உலக இயற்கையின் அழகின் வழியே 'நீ நாடித் தேடுவது என்னை'யே' எனத் தேற்றும் உயிர்ப்பொரு ளிருப்பினையும் துணிந்து கண்டறிந்து, உலக இயற்கைக்கும் மக்களியற்கைக்கும் உள்ள இயைபுபற்றி, உலகத்தே காணப்படும் எழிலுடைய நினைவு, சொல், செயல் என்ற மூன்றிலும் இடைவிடாது ஈடுபடும் மனவுறுதியாகும். உலகியல்பு எவ்வாறுயினும் புறப்பற்றற்று, மனம், உள்ளாழ்ந்து பற்றப் பற்ற, அஃது இலங்கும் நுண்ணிதாம் உயிர்ப் பொருளின் அக அழகில் தெய்வத்தன்மையுறும். கடவுணிலை யுணர்ச்சியிற் றலைப்படும் புலமையுள்ளம் இத்தகையவாறு புறவியற்கைகளை புலனறிவால் ஆய்ந்து அவைகளின் ஒட்பத்தை அகத்தே கல்விக்கல்வி ஆழ்ந்து மெய்ம்மை தெளியின், புலமைக் கல்வி யொன்றே வேண்டாமையன்ன வீடுபேற்று விழுச் செல்வத்தை அளிக்க வல்லது. இதனுன் கல்வியின் விழுப்பமே புலவர்க்குரிய தாதலும் புலமைக் கல்வியின் பயனுன தொழில் வகையும் இன்னது கொல் எனத் துணிந்து கொள்ளப்படும். எனவே புலமைக் கலையும் பயிற்சியும் அவைவழி வாழ்வும் இணைந்தால் வாழ்வு அறிவின்பம் கொண்டு மாட்சி யுறுமென்பது தெருளற்பாலது. மற்றும் பண்பு சான்ற வாழ்க்கையை எடுத்துக்காட்டும் திறன் கலைக்குஉரியதெனச் சிந்தித்துணர்க.

வாழ்க்கையின் விளக்கத்திற்குரிய கருவியாய புலமைக் கல்வி அறிவின்பத்தைக் கருவுற்று, பொதுமையில் நலன் பயப்பதினுன், பண்டைத் தமிழ் நல்லிசைப் புலமையோர் உலக இயற்கையினையும் உள்ளியற்கையினையும் புறமும் அகமுமாக முறையே கொண்டு ஐவகை இன்பப் பகுதியில் காதற் கணவனும் மனைவியும் கெழுமியிருந்து இல்லறம் நிகழ்த்தும் காதற் பெருமையினை யுணர்த்தும் ஓவிய வுருக்கள் வழி இனிமையினையும் விழுப்பத்தினையும், அறிவிற்சுரந்து பெருகும் நுணிகிய உளத் தத்துவ கருத்துகளோடு உடன் பெய்து செய்யுளிசைத்து கலைப்புலமை நடாத்திக் கேடில் விழுச் செல்லராயினுர். புலமைக் கலையோடு யாக்கப் பட்ட நூற்பாக்களை நன்கு நுனித்

தறியின், அவை, தலைவன், தலைவி ஆகியோரையும், அன்னவர்தம் காதல் வாழ்வு சார்ந்திருக்கும் தோழியரையும் முதன்மையாகக் குறிக்கொண்டு அன்னாரது உளப்பாட்டில் பலவேறுபட்ட நிலைகளிலே உதிக்கும் அகக் கருத்தையும், அக்கருத்திற்கேற்ப புற இயற்கையையும் இன்பச் சுவைக்கே நிலைக் களனாக்கி, சொல் விழுப்பமும் பொருள் விழுப்பமும் இயற்கை வழி யெழூஉம் நடையழகில் பொருந்த மிக நுணுக்கமான உள்ளுணர்வை மெய்மமையிற் செலுத்தும் செப்பம சான்றவை. மற்றும் அவை கவிநடைக்கு ஏற்றம் அளிக்கும் இயற்கைப் பொருள்களையே உவமமாகக் காட்டி, காதலின்பத்தி னியல்பில் இடையிடையே எய்தப்பெறும் துன்பத்தோற்றங்களால் இன்பத்தில்வெறுப்புத் தலைப்பட்டு பேரின்ப விழைவுடன் வீடுபேறு நாடிச் செல்லும் ஆற்றினைப் போதிக்கும் திறனும் பெருமிதமும் கொண்டு திகழ்வன. இத்தகையவாறு உணர்வை உருக்கவல்ல கிளர்ச்சியும் இனிமையும் ஓவாது சுரக்கும் பாக்களை நுணுகியாய்ந்து மெய்ம்மைதேறின் அறிவு வளர்ச்சியும் இன்ப நிலையும் மிகு மென்பதில் ஐயமில்லை யென்க.

அகம் புறமென்னும் புலமைக் கல்வி முறையான் உணர்வுகளையும் பொருள்களையும் இயற்கையில் இழைந்து நெளியுமாறே, செறுத்த செய்யுள்வழி அறிவு தோயவும் இனிமை விளையவும், புலமை மிக்கார் இசைக்கும் விழுப்பேறு அன்னாரது அருளிய லறிவினாட்சியி லமைந்த இணையற்ற எழில் மலர்ச்சியினைப் புலப்படுத்தா நிற்கும். உண்மை அருளுக்கு உறைவிடமாகிய அவரதுள்ளம் பிறரோடு உவப்பத்தலைக் கூடி அளவளாவி நெகிழ்ந்து பிரியும் தொழிலை இயல்பாய்ப் பற்றுதலால், புலமைக் கலையுடையார், பொய்யா நாவுமெய்தி, யாவர்மாட்டும் இனிமை பயக்க, உள்ளம் குளிருமாறு மகிழ்ந்து, அன்புடன் பழகலினும் உறுதிதரும் செவியறிவுறுத்தலினும் செவ்விதாய்த் தேறி பேரமைதியினிற் பேராது வைகவும் வல்லராய்ப் பயன்பட்டுத் திகழ்வரென்பது கருத்திற் பதித்தல்வேண்டும். மக்களறிவு மாட்சியும் வளர்ச்சியுமுற, புலமையாளர் தமது விழுமிய உள்ளப் பழக்கத்தால் யாக்கும் செய்யுளெல்லாம் தீது செறுக்கும் நன்னெறிக்கண்ணதே. எனவே புலமைக் கலையறிவின் பயனான தொழில் வகையின் செயற்றிறமைக்கும், சொல்லமைவுக்கும், நினைவி னமைதிக்கும் நிலைக் களனாய் நின்று இனிமை பயக்கும் செய்யுளின் எழிலை எழச் செய்வது யாவையெனின், அவை, உயிர்ப்பியல்பினையுடைய இயற்கைப் பொருளெழிலும், அறிவொளியை துளக்கமுற விளக்கும் தெள்ளுணர்வெழிலும், மெய்ம்மையும் அறமும் நுவலும் பொருண்மொழியின் எழிலுமென்க.

கற்க நாலூறும் அகப்பொருளாய புலனெறி வழக்கினை யுணர்த்தும் பாக்கள், வாழ்க்கையினது இயற்கை நலனையும், அறநெறியின் தெளிவினையும், அறிவின் நுட்பத்தையும் அக வியற்கையின் இயல்பினையும், அன்புபற்றி உயிர் நுகரும் இன் பத்து எழிலையும், அருளுயிர்ப்பினையும் புலப்படுத்தி உள் ளுணர்வை உருவாக்க வல்லதாய்த் திகழ்வதினுன், தமிழ்ச்சுவை யுணர்வில்லார்க்கும், அது தந்து மிக்கதோ ரின்பம் பயப்பவை. மற்றும் அவை உயிருக்கு ஆர்வத்தை எழுப்பி அமைதிதரும் காதலன்பின் திறத்தை நுண்மையாய் விரித்துரைத்து உயிரின் வெவ்வேறு நிலைகளை கற்பவருள்ளத்தில் பெருக்கமுற சுட்டி யுணர்த்திச் செல்லும் நீர்மையுங் கொண்டு உலகிற்குச் சிறந்த தொரு நடையை உணர்த்துவன. காமன்றன் பெருவாழ்வினைப் பெற்ற கட்டழகினையும், உறுப்பமைப்பினையும், ஆடை அணி வகையின் சிறப்பமைப்பினையும் நவிற்சிபெற உணர்த்துவதால், மெய்யறிவு மெய்யின்ப நிலைகள் கையறுவதேயன்றி கையுறுவ தாகாது என்ற உட்கிடையை விளங்க வுணர்த்தும் மெய்ம்மை சான்றவை. ஐம்பொறிகளின் வழி காணும் ஆன்மப் பகுதியே உடலெனவும், வாழும் மக்களுயிர்க்கு ஆன்மாவிற்கு வேருக உடலில்லை யெனவும், உயிர்க்குரிய சிறப்பியல்பாகிய அறிவு கருவியாகத் தோன்றும் இன்பமே ஒப்புயர்வில்லா மெய்ப் பேரின்பமென்பதும், நெஞ்சிற்ருேன்றும் நினைவு, உணர்வு, துணிவுகளைக்கொண்டு அறிவு, விழைவு, செயல்களை ஒரு முக மாக நெறிப்படுத்தி உள்ளத்தில் அன்புக கனலோங்க உண்மை யொளியில் அறமே பற்றுக் கோடாய் குறிக் கொண்டொழு கின், யானென்னும் அகந்தை சிதறுண்டொழிய, உயிர்ப் பண்புகள் காதலாற் கலந்து புற அழகில் மயங்காது, உள் ளியற்கைகளில் இலங்கும் அக அழகில் ஈடுபட்டு பிறவாநெறி தருதற்கும் பயன்படுமென்பதும் அம்மாசற்ற பாக்களின் நல்லறி வுறூஉவாகும். இத்தகையவாம் புலனறிவின் அகத்தினி மையை உலகியற்கையில் பயின்று ஆய்ந்து சொல்லோவியமாக யாத்த செய்யுட்கள் யாவும் எழிலிலும் இனிமையிலும் கரு வுற்று, புலவர்களது உட்காட்சியின் உரு விளக்கமாகப் பொலிந்து, யாவர்க்கும் உணர்வினை எழச்செய்து இன்றுகாறும் வன்னும் நலனும் சுரந்து நிலைபெறுவதால், புலமைக் கலைத் தெளிவின் பயனுன புலவர் தம் தொழில் எவரையும் இன்பத் தின்கண்ணிறுத்தி அதன் மயமாக்கும் பேராற்றலைக் கொண் டுள்ள தென்பது தெற்றெனத் தெளியப்படும். புலவர் பெரு மக்கள் அறிவு நலத்தோடு இனியதாய் ஓம்பிவரும் நற்ருெண் டின் மேன்மையும் இயல்பும், எடுத்துக் காட்டாக ஓர் செய்யுள் வழி, கனிந் தொழுகுதலைக் காண்குவம்.

அகப் பொருளாய புலனெறி வழக்கினை சுவையுற உணர்த்துதற்கேற்ப, பாவகையில் சிறந்தது கலிப்பாவாகும். கற்றறிந்தோரேத்துங் கலிப்பாடற்றொகையில், தலைமகனூற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, வெஞ்சுரத்தில் பொருள் காரணமாக பிரின்றீரெனக் கேட்பின், தலைவி, இவ்வகையாகற்பாலளெனக் கூறி செலவழுங்குவித்து, அதனைத் தலைமகட்குச் சொல்லியதாக ஒரு செய்யுள் வந்துள்ளது.

'வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய் திசைகெட் டானிறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதவி
னலவுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழ
லுலகுபோ லுலறிய வுயர்மர வெஞ்சுரம்;

இடைகொண்டு பொருள்வயி னிறத்தி நீயெனக்கேட்பி
னுடைபுநெஞ் சுகவாங்கே யொளி யோடற்பாண்மன்னோ
படையமை சேக்கையுட் பாயலி னறியாய்நீ
புடைபெயர்வா யாயினும் புலம்புகொண் டினைபவள்;

முனிவின்றி முயல்பொருட் கிறத்திநீ யெனக்கேட்பிற்
பனியகண் படலொல்லா படர்கூர்கிற் பாண்மன்னோ
நனிகொண்ட சாயலா ணயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினுந் துறப்பஞ்சிக் கலுழ்பவள்;

பொருணோக்கிப் பிரிந்துநீ போகுதி யெனக்கேட்பின்
மருணோக்க மடிந்தாங்கே மயல்கூர்கிற் பாண்மன்னோ
விருணோக்க மிடையின்றி யீரத்தி னியன்றநின்
னருணோக்க மழியினு மவலங் கொண்டழிபவள்;

எனவாங்கு,

வினைவெஃகி நீசெலின் விடுமிவ ளுயிரெனப்
புனையிழாய் நின்னிலை யான்கூறப் பையென
நிலவுவே னெடுந்தகை நீளிடைச்
செலவொழிந் தனனாற் செறிகநின் வளையே.

நச்சினார்க்கினியர் உரை தழுவிய இதன் கருத்து வருமாறு.

'தலைவரே! ஓதுகிலையாகிய நெறி (பிரமசரியம்) காத்தலான் இளமைப் பயன் கொள்ளாது வறியனவன் இளமைச் செவ்வியின்றி இருக்குமாறு போலத், தளிர்கள்வாடின் கொம்புகளையுடையவாய், கொடுத்தற்கு மனம் வறிய னனவனுடையான் செல்வம் தன்னைச் சார்ந்தார் தம்மைப் பாதுகாவாதவாறுபோலத், தன் கீழ் நின்றார்க்கு நிழல் அளிப்பதன்றாய், யாவரிடத்தும்

உலக ஒழுக்கத்தைக் கடந்து தீங்கு புரிந்து பின்பு புகழில்லாதவனுடைய முடிபு காலத்து அவன் கிளையொடு கெடுமாறுபோல, மரம், சினையே யன்றி வேரொடு நின்று வெம்பும்படியாக செஞ்ஞாயிற்றின் பரந்த கதிர்கள் சுடுகையால் வருந்தி, குடிமக்கள் கூக்குரலிடும்படி கொலைக் கஞ்சாத அமைச்சரான் நெறியில்லா நெறியில் பொருளைக் கொண்டு செங்கோல் வளைந்த அரசரது குடை நிழலிற்றங்கிய உலகம்போல, உலறின உயர்ந்த மரங்களையுடைய வெய்ய காட்டகத்தின்வழி, வேறு நாட்டிடத்தே, நிலையில்லாத பொருள் காரணமாய் பிரிந்து நீர்போவீர் என யான் கூறக் கேட்பின், பஞ்சணையின்மீது துயிலிடத்து நீவிர் அவள் வருத்தம் அறியீராய் அவள் முயங்கிய கையை விட்டுச் சிறிது நீங்குவீராயினும், அது பெரிதும் பொறாது தனிமைகொண்டு வருந்தும். எமது தலைவி நெஞ்சழிந்து கெட்டுப்போக மிகவும் ஒளி கெடுவதொன்றோ! இறந்து படுவாளே!

வெறுப் பின்றி முயன்று நாடும் பொருள் மேற் கொண்ட வேட்கையால் நீர் பிரிவீரென்று யான் கூறக் கேட்பின், அம் மடமங்கை, நீர் ஒரு குறு விளையாட்டை விரும்பி நீங்கியதாக பாவனைசெய்து சிறிது காலந் தாழ்ப்பினும் அத்துணை நீக்கத் துக்கும் மனம் பொறாது கலங்குகின்றவள், நீருண்ட கண்கள் மிகவும் உறக்கத்தைப் பொருந்தாவாய் நினைவு மிகுவதுடன் நிற்பாளோ? இறந்துபடுவாளே!

நீர் பொருளை விரும்பி பிரிந்து போவீரென யான் கூறக் கேட்பின், நாணுடுத்த அந்நங்கை, நின் அருட்பார்வை சற்று நீங்கினும் வருத்தமும் மருளும் கொண்டு நெஞ்சழிபவள், அழகு கெட்டு மிகவும் மயக்கம் மிகுவாளோ? இறந்துபடுவாளே!

புனைந்த பூணினையுடையாய்! நீர் பொருளைத் தேடுவதில் நாட்டங் கொண்டு போவீரேல், இவளது உயிர் தானும் போமென்று 'தலைவி! நின் பிரிவாற்றாமையைத் தலைவர்க்கு நான் கூற அவர் பிரிந்து போதலைப் பையெனத் தவிர்ந்தனர். இனி நின் கைவளை கழலா திருப்பனவாக' எனத் தோழி தலைவிக்குக் கூறிய கூற்றாம்.

சொற் றொடர்க்கு ஆற்றொழுக்காகப் பொருள்கொண்டு மிகவும் அருமையாக உரைகூறிச் செல்லும் கூர்த்த பேரறிவாளரின் திறன், உளங் கவரும் பான்மை யுடையதாதலை உணர, அச்செய்யுளின் இனிமையும், அதனையியற்றிய புலமையாளரின் கனிந்த மனநிலையும், அதனிற் குழைந்து விளையாடும் கவிதையும்

பாலைக்கலிப் பாராட்டு (Appreciation.)

வேலூர்க் காரழகன்.

மேல்புலம் கீழ்புலமென் றிரு கூறாக வையகம் பிரிக்கப் பட்டு முன்னையதற்கும் பின்னையதற்கும் கிரேக்க நாடும் தமிழ் நாடும் கலைகளின் பிறப்பிடமாக விளங்குகின்றன. இவ் விரு நாடுகளின் இலக்கியப் போக்கையும் காலத்தையும் கூர்ந் தாராயுமிடத்து ஹோமரைப் பின்பற்றியே ஐரோப்பிய இலக் கியம் வளர்ந்தமை நனி விளங்கும். கிரேக்கநாடு ஹோம ராலும், இதாலிய நாடு டாண்டேயாலும், ஆங்கில நாடு ஷேக்ஸ்பியராலும் விளக்கமுற்று இறவாப் புகழை எய்தி உலகப் புகழையும் எய்தியுள்ளமை வெள்ளிடைமலை. ஹோமர் கதையில் கலையை இலங்க வைத்தார்; டயண்டே தம் வாழ் வியலைக் கற்பனையில் பாத்திரங்களைக் கொண்டு புரைதீர்ந்த இலக்கியத்தில் பிறங்கவைத்தார்; வையகத்தி லின்றளவு

வெள்ளிடை மலையாம். இக் கலிப்பாவின்கண், முதற் பொரு ளும் அதன் காரணமாகக் கருக் கொண்டெழும் கருப் பொருளு மாகிய புறப்பொருள்களின் சிறப்பியல்பையும் விளக்கங்களை யும் உணர்ச்சி பெருக முறையாய் கிளந்து, பின்னர், அகத்தில் தோன்றும் பிரிவாற்றாமையின் இரக்க வுணர்வை பெருக்குதற் குரிய உரிப்பொருளை, அம்முதல் கருப்பொருள்களுடன் இய லழகு வாய்ப்ப இழைவாய் நுட்ப் திட்பச் செறிவு காணப் பொருத்தி, பொருள்வழிச் சொற்சுவைப் பெருக்கமுடன் இசை தழுவிக் கனியும் நடைநலனின் இனிமை தோன்ற, புலமைக்கலை யோடு யாக்கப் பட்டிருத்தல் எத்துணை மாட்சியுடைத்து! இப் பெற்றியினை சற்றுக் கூர்ந்துணரின், இன்பப் பகுதி அடங்கும் அகத்தையும், அறமும், பொருளும், அவற்றின் பயனான வீடும் என்ற முப்பகுதிகளடங்கும் புறத்தையும் ஒன்றவைத்தல் தமிழ் மரபென்பதும், புறப் பொருளறிவின் விரிவில் அகப்பொருட் டெளிவின் இனிமையினை மனவியற்கைக்கு இசையச் சுருக்கிக் கூறி, உணர்வை, செய்யுளியலால் மெய்ம்மையிற் செலுத்திச் செழுமையுடன் இன்புறுத்துவது தமிழ் மொழியின் செவ்வி யென்பதும் ஈண்டுப் பெரிதும் நினைவு கூறற்பாலது.

(தொடரும்.)

மெவராலும் போட்டியிட வியலாது பாத்திரங்களைக்கொண்டு உணர்ச்சி என்றும் நிலவ, படிப்போர் உணர்ச்சி வயமெய்தும் பெற்றிமையுடன் நாடகங்களை யாத்து அரி ஏறு என இறு மாந்துலவுகிறார் ஷேக்ஸ்பியர். ஹோமருக்கு மூவாயிர மாண்டுகட்கு முன்னரே தொல்காப்பியர் எழுத்து, சொல் என்றவைகளுக் கிலக்கண மமைத்ததோ டல்லாது இறை-உயிர்-உலகு இம் மூன்றிற்கு மிலக்கண மியம்பி, மலை-காடு-வயல்-கடல் என நிலத்தைப் பிரித்து, இவண் ஆணுக்கும் பெண்ணுக்கும் நிகழும் உணர்ச்சிகளை முன்னிறுத்தி, இந் நான்கு மல்லாத பாலையைக் கூறி, இவண் பிரிவைத் தலையாய தாக்கி, மேற்சொன்ன நான்கையும் எண்ணும் நிலையை நவின்று, ஆண் பெண் இவர்களின் வாழ்வு இவ் வைந்திற்கு முட்பட்டதென்றுரைத்து மெய்ப்பொருள்-பண்பு-வாழ்க்கை இவைகளை முன்னிறுத்தி வாழ்வில் கலையையமைத்தார். தொல் காப்பியரின் செய்யுளி லிலங்கும் தூய்மையும்-செழுமையும்-ஒளியும்-அறிவியலும் எந்நாட்டு மொழியிலு மிலங்கவில்லை. உலகிலுவமையற்றுப் பெருமிதத்துடன் எவராலும் போட்டி யிட வியலாது பீடுடன் விளங்குவதுடன் அன்று முதலின் றளவு மரும்பு மிலக்கணங்களெல்லாம் தொல்காப்பியத்தின் முன்னர்ப் பரிதியையெதிர்க்கும் பனி போலாகின்றன. இவ்வுயர் வுடைய கலைப்பனுவலுக்குப் பின்னர் மூவாயிர மாண்டுகள் இலக்கிய மில்லாப் பாலைவனமாக விளங்கிய தமிழகத்தில் பல கலைகளில் கற்றுத் துறைபோய பெரும் புலவர்கள் அப் பழங்காலத்தே அரும்பிய தொல்காப்பியரின் தூய திருவடி நிழல் நின்று அவர் தொகுத்தமைத் தளித்த செந்தமிழிலக் கியச் செம்பாதையிலே கற்பனைக் கிரையாகாது மெய்ப் பொருள்-பண்பு-வாழ்வு இவைகளை மூலமாகக் கொண்டு கலை யைப் பிறங்கவைக்கையில் உணர்ச்சியை முன்னிறுத்தி உள் ளத்தின் நிலையைத் துளக்கமற விளக்கினர்.

தொல்காப்பியத்தை அடுத்து வளமுடன் விளங்கிய தொகை நூல்களுக்குப் பிறகு கடல் கோள் நிகழ்ந்தது; கொடுங் கடல் கோளுக்குப் பின்னர் தோன்றிய சிலப்பதி காரமும் மணிமேகலையும் பாத்திரங்களைக் கொண்டு மெய்ப் பொருளையும்-பண்பையும் - வாழ்வியலையும் கலையொளியுடன் இனிதே விளக்குகையில் தமிழர்க்கே யுரிய திணைமயக்கத்தை ஓரிடத்தில் தான் கூறினர்; சீத்தலைச் சாத்தனர் தமிழர்க்கே யுரிய திணைமயக்கத்தைக் கூறுது மற்றத்தமிழ்ப் புலவர்களைப்

போல் கற்புக்கே உயர்வளித்துத் துறவுக்கே அழைத்தேக ஆவன அமைத்துள்ளார்; அகத்திணையை மறுக்கும் கொள்கையுடைய சமண—பௌத்த காலத்துக்குப் பின்னர் திணையியலையும் — சிவபரம்பொருளையும் — வாழ்வியலையும் செந்தமிழில் கோவையில் கனிவுடன் மிளிரவைத்த உயர் சிறப்பு மணிவாசகருக்கே உரியது; மெய்ப்பொருள்—பண்பு—வாழ்வு இவைகளை முன்னிறுத்தி, தூய தமிழில் சிவநெறியையும் தமிழர்க்கே உரிய திணையொழுக்கங்களையும் வரலாற்றுச் சான்றுகளுடன் தமிழ்க்கலையொளி ஒளிரச் சேக்கிழார் பெரியபுராணம் உவந்தீந்தார்; மெய்ப்பொருள்—பண்பு—வாழ்வு இவைகளை முன்னிறுத்தாது கலையை முன்னிறுத்தி, கற்பனையைத் துணையாக்கிப் பேரிலக்கியம் வரைகையில் தமிழர்க்கே உரிய திணையொழுக்கங்களைச் சிறப்புறக் கூறி, தமிழறத்தையும், தமிழ் நாகரிகத்தையும் நலமுடன் நவின்று புற நாகரிகப் படையெடுப்பிலிருந்து தமிழ்க் கலையையும் நாகரிகத்தையும் காத்துக் கற்பனை தோய்ந்து தமிழ்க்கலைக் கவியாக விளங்குகிறார் கம்பர்.

பாத்திரங்களைக் கொண்ட பைந்தமிழிலக்கியங்களுக்கும் கன்னித் தமிழ்க்கலைப் பனுவல் தொல்காப்பியத்திற்கும் இடையேயுள்ள தொகை நூல்கள் உணர்ச்சி நிரம்பிய பாக்களாக விளங்கினும் வாழ்வை வளமுற வைக்கும் எழில் நிறைப் பாக்கள் கொண்டு கனிவு திகழ மிளிர்கின்றன. தொகை நூல்கள் தகவு மலிந்து உணர்ச்சி ஒளிகளுடன் ஒளிரினும் வாழ்வு இன்பமாக அமைக்க அடிகோலி நலமுறுதற்குரிய நல்ல நம்பிக்கையை உவகையுடன் ஊட்டி உயர்வுற வைக்கின்றன. பொதுச் சிறப் பெய்திய தொகை நூல்களுள் தனிச் சிறப்புடைய கலித்தொகையுள் பாலைக்கலி மகுட மிடும் மாண்புபெற்று உள்ளத்துள் நிகழும் காதல் எழுச்சிகளை உணர்ச்சியுடன் விளக்குகையில் கனிந்த காதலின் சித்திரம் சொல்லோவியமாகச் சிறப்புடன் விளங்கல் கண்கூடு. புரை தீர்ந்த பொற்கொடிகளின் பீடு நிறை உள்ளங்களில் சால்புடன் செறிந்துறைந்த செழுமைக் காதல் தலைவர்கள் பிரிவால் அலக்கணுறும் அவநிலையை விளக்கி ஏனையோரையும் வியப்புறவைத்தலில் பாலைக்கலி முதன்மையாக விளங்குகிறது. உலகக் காதலிலக்கியங்கள் பெறும் உயர்வைக் கலித்தொகை பெறுமலில்லை. பாலைக்கலியில் தவழும் காதல் சித்திரங்களில் நற்பொருளும் (தத்துவம்) கலையும் இயற்கையும்—

இறைநெறியும் — தூய்மையும் — சால்பும் — எழிலும் பிணைந்து பெருக்கெடுத்து ஓடுகின்றன. ஓரிலக்கியத்தில் இத்தகைய எண்ணில சிறப்புகள் தோய்ந்து திகழ்தல் வேறெம்மொழியிலும் காண்டலரிது. உலக வழக்கொழிந்து இலக்கிய வாழ்வு இரிந்த மொழிகள் உலகப் புகழையும் பாராட்டலையும் பெற்று உவகையுறுகின்றன; உலக வழக்கொழியாது இலக்கிய வாழ்வு இரியாது செய்யுளியலில் பெருமிதத்துடன் ஏனைய மொழிகளையும் வென்று தனித்து வளமுடன் விளங்கும் தமிழ் உலகப் புகழையும் பாராட்டலையு மெய்தவில்லை. அந்தோ! அந்தோ!!

பீடுறும் பாலைக்கலியை மாண்புற வனைந்த சேரமான் பெருங்கடுங்கோ மெய்ப் புலவராக விளங்குகிறார்; மெய்நிகழ்ச்சியை மூலமாக்கி அன்பும் அறமும் கலந்த பண்பாம் காதலை இடையாக்கி உணர்ச்சியால் பிணைத்து இன்பமாம் கலையைப் பிறங்க வைத்துப் பல்வேறுபட்ட தலைவியர் தலைவர்களின் உளநிலையை நவின்று வாழ்வு வளமுற இளமையும் காமமும் அன்பும் கலந்த காதலே தலையாயதென்றுரைத்து ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டு வாழக் காதல் கலையொளி ஏந்தி இன்புறும் இன்பத்தமிழ் இலக்கிய மலர்வனத்தில் உவமையற்றுயர்வெய்திக் காதல் உவகை சொரிந்த வண்ணமாய் வாழ்கிறார்.

சிவ பரம்பொருளாடிய கொடு கொட்டி—பண்டரங்கம்—காபாலம் இம்மூன்று கூத்தையும், உமாதேவியார் அவைகளுக்குரிய சீர்—தூக்கு—பாணி என்ற தாளங்களைத் தந்தமையும், கடவுள் வாழ்த்தில் கூறி அனைத்தையும் தோற்றுவித்த பரம்பொருள் பாவையுடனே தாளமும் கூத்தும் பிணைந்திருத்தல் போல மக்களினமும் பிணைந்து பிரியாது வாழ உலகுக்குரைக்கிறார்.

இரந்தோர்க் கீதலியலாமையா னுளமொடிந்து தலைவியைப் பிரிந்து பொருளீட்டுவான் வேண்டித் துணிந்த செய்தியையறிந்த தலைவி தன் மார்பைப் பிரியாதிருத்தலும் மெல்லியதோளைப் பிரியாதிருத்தலும் பொருளாகுமேயன்றிப் பொருள் பொருளல்ல வென்று பகர்ந்து தலைவன் பிரியின் தன்னுயிர் பிரியுமென்றுரைத்துத் தலைவன் செலவைத் தடுத்தனள்.

பொருளை முன்னிறுத்திச் செல்வதை யறிந்த தலைவி, முத்து வடங்கள் தவழும் மார்பை இடையறாது முயங்கி, கதுப்பை எழிலுடன் வாரிமுடித்து, முள்ளொத்த பல்லி னின்று ஊறும் எச்சிலை இனிய நீரொன்று நவின்று, மாந்தளிர் மேனியில் தேமலை அலங்காரமாகப் பெற்ற மார்பைக் கண்டு மகிழ்ந்தவர் பொருளைப் பெரிதாகக் கருதிப் பிரிந்து ஏகல் யாது காரணம் பற்றி என்று வருந்தியதும், செல்லுதலை விடுத்தான் தலைவன்.

பொருள் காரணமாகத் தலைவன் செல்வதை யறிந்த தலைவி பஞ்சணையி லிருவருமாகப் படுத்துறங்குகையில் தலை வன் சிறிது விலகின் தலைவி புலம்பியதையும், பிரியின் நீர் நிரம்பிய கண்கள் உறங்காவென்றும், பிரிவால் அருள் நோக்க மிழந்து அவலமுற நேருமென்றும் மொழிய, செல்லுவதைத் தவிர்த்தான்.

வளமைக் குரிய பொருள் தேவை என்றுணர்ந்ததற்குத் தலைவியைப் பிரிந்தேக வேண்டுமென்றதை யறிந்த தலைவி இள மையும் காமமும் ஓராங்கு பெற்றோர் வளமை விரும்பவேண்டுவ தில்லை என்றும் பிரிவால் இளமை கழியுமென்றும் இளமைக் கீடு செய்ய வியலாதென்றும் கிழிந்த ஆடையிருப்பினும் தம்முள் தழுவி பிரியாது ஒன்றி வாழும் வாழ்வே சிறப் புடைத்தென்றுங் கூறித் தலைவனைத் தடுத்தனள்.

தலைவனின் பிரிவு தீவினையின் காரணமென்றும் அங் ஙனம் போதல் கூடாதென்றும் கூறிச் செல்லவிடாது செல வைத் தவிர்த்தனள்.

மேற்கூறிய நிலைகளை நன்காராயப்புகின் வாழ்வுக் கின்றி யமையாத பொருளினும் பிரிவின்றி ஒன்றி வாழும் வாழ்வே உயரிய வாழ்வென்றும், தலைவனின் பிரிவால் மாந்தளிர் மேனி பசப்புறு மென்றும், விழிகளில் துன்ப மழை சொரிந்து கொண்டே இருக்குமென்றும் வளமையாம் பொருளைவிட இளமைதான் சிறந்ததென்றும், பொருளுக்கீடு உண்டென்றும், இளமைக் கீடில்லை என்றும் தலைவியர் கூறித், தலைவர்களுக்கு நல்லுரை நவின்றதை எண்ணுங்கால் ஆண் மக்களினும் பெண் மக்களே தலைசிறந்தவர்களென்றும் வாழ்வியலை நன்

ணர்ந்தவர்க ளென்றும் விளங்குவதுடன் சிறந்த அறிவியற் பிழம்புகளாகவும் விளங்கு கின்றனர்.

தலைவன் பிரிவதை யறிந்த தலைவி காட்டின் கொடுமை யையும் விலங்குகளின் இன்னலையு மியம்பித் தலைவன் பிரிவு அன்பின் பிரிவாகு மென்றும் தலைவர்க்குக் காட்டில் துன்பம் நிகழுமாயின் அத்துன்பத்தில் தலைவி பங்கு கொள்வதில் பெறும் இன்பத்தினும் வேறு இன்பமில்லை என்றுமியம்பிச் செலவைத் தடுத்தாள்.

தலைவனுடனே தலைவி வருவதை யறிந்ததும் யானை களும் மான்களும் தங்க வியலா வெம்மை மலிந்த காட்டில் தலைவி நடப்பின் தாமரை இதழ்போன்ற பாதம் கருகுமென் றும், பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கிய தலைவி சிங்கத் தின் குரலால் நடுக்க மடைவளென்றும், உலர்ந்த செடிகளிட மிருந்துவரும் வெம்மைக் காற்று மாந்தளிர் மேனியை வாட வைக்குமென்றும் கூறவே தலைவி எய்திய நடுக்கத்தையறிந்து தலைவன் செல்லவில்லை.

காட்டின் கொடுமையைக் கூறிய தலைவனிடம் தலைவி, வாழ்நாள் காற்றைக் காட்டிலும் நிலையற்றதாயினும் தலை வனின் உள்ளத் தன்மையே கொண்டு வாழ்பவள் பிரிவால் இறந்து படுவ ளென்றும், ஆற்று நீர் விரைவில் கழிவதைப் போன்று இளமை கழியுமாதலால் பிரிவால் மனம் கலங்கி அழிவதன்றி வேறில்லை என்றும், தங்குவதற்குக் கூட நிழ லில்லா மரங்களுடைய காடென்ற பொழுது தலைவி பெரிதும் வருந்தி நிழல் மலிந்த விடத்திருக்கும் தளிர் வெளுப்பதைப் போலத் தலைவனின் பிரிவே நிறமழியு மென்றும், என்றூம் தலைவனின் திருவடி நிழலை நீங்கி இருந்தலை எண்ணவும் முடியா தென்றும், காட்டிலுள்ள பெண்புலி ஆண்புலியை நீங்காது அதன் பின்னே வாழ்கிற தென்றும் கூறிச் செல வைத் தடுத்தாள்.

தலைவன் பிரியின் உண்ணா திருப்ப ளென்றும் உயிர் வாழா திருப்ப ளென்றும் மொழிந்து, தண்ணீர் வேட்கையுற்ற காலத்து ஓலைக் குவளையில் நீர் அருந்திய பின்னர் அதை எறிவதை யொக்கு மென்றும், அணங்கினழகைத் துய்த்த பின்னர் விலகுவது மக்கள் நீங்கியமையால் ஊர் பொலி

விழந்ததைப் போன்றதென்றும், நங்கையின் நல்லியல்பை உண்ட பின்னர் விலகுவது அணிந்த மலரைப் பின்னர் எறிவதைப் போன்றதென்றும் கூறிச் செலவைத் தடுத்தான்.

உடலின்பத்தைப் பகராது உள்ளத்தின் நிலையை மொழிந்து இயற்கைச் சான்றுகளைச் செப்பி, தலைவனின் துன்பத்தில் பங்கு கொள்வதே பேரின்பமென்றும், தலைவனின் நிழல் நீங்கி வாழ வியலாதென்றும், தலைவனின் பிரிவு அன்பின் பிரிவென்றும், தலைவியைப் பிரிதல் நன்றி கொன்ற செயலாகுமென்றும் கூறிய மங்கையரின் நிலை அவர்களின் மாண்புடைமையை விளக்குவதோடு தலைவன்மீது பற்றியிருந்த பற்றினைப் பெரிதும் விளக்காமலில்லை.

அயலார் தூற்றலுக்கஞ்சி தலைவியைப் பிரிந்தேகத் துணிந்த தலைவனைப் போகாதிருக்குமாறு கூறியும் முடியாமற் போகவே, செல்லும் வழியில் நீர் நீத்த சுனைகளிலுள்ள இலைகளோடு வாடிய அழகிய மலர்கள் தகைப்பன வென்றும், மரத்தைப் பிரிந்த மலர்க் கொடிகள் தடுக்குமென்றும், மரத்தை அலங்கரிக்கும் அழகிய தளிர்கள் வாடியதால் செல்லல் கூடாதெனச் செப்புமென்றும் இயற்கையின் கூறுகளை எடுத்துரைக்கவே செல்லுவதைத் தவிர்த்தான் தலைவன்.

பொருளைமுன்னிறுத்திச் செல்ல விழைந்தபொழுது விழாவற்ற பின்னர் அவ்வூர் பொலிவிழந்ததை யொக்கும் தலைவி வாழ்வென்றும், கொடிய ஆட்சியால் கலக்குற்றதையொக்கும் தலைவியின் முகமென்றும், பிரியும் நாள் இறந்துபடும் நாள் என்றும் நவிலவே செல்லுவதை விடுத்தான் தலைவன்.

பொருளீட்டுவான் வேண்டித் தலைவியைப் பிரிய நினைத்த தலைவனிடம், பிரிவு பொற்கொடியைப் பேதுறவைக்குமென்றும், இலங்கும் சந்திரனிலுள்ள களங்கத்தைப்போல் இயல்பாகவே களங்கமில்லா முகம் பிரிவால் களங்க மெய்துமென்றும் நீலோற்பல மலர்கள் நீர் சொரிவதைப் போன்று விழிகளிலிருந்து நீர் வடிந்த வண்ணமாயிருக்குமென்றும் வெண்காந்தட் பூக்களிதழ்கள் உதிர்வனபோன்று வளையல்கள் கழலுமென்றும் கூறி, விலகுவதை விலக்கினள்.

தலைவன் பிரிவதைத் தடுப்பான் வேண்டி இயற்கையில் பிணைந்திலங்கும் இனிய காட்சிகளைக் கூறி, பிரிவால்,

உள்ளம் குழம்பி முகத்தின் பொலிவு மங்கு மென்றும், சந்திரனின் எழிலை நிகர்த்ததொளிரும் எழில்நிறைமுகமும் பசப்புறுமென்றும், மாண்புடை மகளிர் மொழிந்தமையைக் கருதுமிடத்து அவர்களின் கூரிய அறிவும் சால்புடைய உள்ளமும் இயற்கையிலேயே தோய்ந்து நிகழ்ந்தமை பாராட்டற் குரியதே. இயற்கையின் தன்மை எய்தி ஒற்றுமையின் உயிராக விளங்கல் வெள்ளிடைமலை.

பொருளைப் பெரிதெனக் கருதித் தலைவியைப் பிரியவிழைந்ததையறிந்த தலைவி பழங்காலத்து உடலழகை உயர்த்திப் பாராட்டிப் பின்னர் அதை மறந்து மயக்க மேலீட்டான் அன்பை அறவே மறந்து பொருளை விரும்புதல் கூடாதென்றும், செம்பாதியை நீங்கி வாழ்தல் செம்மை நெறியை நீங்கி வாழ்வதாகு மென்றும், பிரிவதால் இம்மையும் மறுமையும் பகையாகு மென்றும் கூறித், தலைவன் செல்லுவதைத் தடுத்தான்.

தலைவன் செல்லுவதையறிந்த தலைவிதலைவனின் பிரிவால் இளந்தளிரின் நிறத்தை நிகர்க்கும் எழில் நிறம் குன்றுமென்றும், பிரிந்து பெறும் புறப்பொருளால் அகப்பொருளைப் பெற வியலாதென்றும், தண்ணொளி சொரியும் மதியினும் பொலிவுடைய முகமானது பிரிவால் அரவம் விழுங்கிய மதியைப்போல் பொலிவிழக்கு மென்றும், என்றாலும் தெளிந்த அறிவைப் பெறப் பிரிந்தாலும் இழந்த பொலிவைப் பெற வியலாதென்றும், நீலோற்பல மலரை யொத்த விழியில் சொரியும் நீரானது எரிகின்ற திரு உமிழும் நெய்யை ஒக்குமென்றும், என்றாலும் நற்பொருளைப் (தத்துவத்தை) பிறநாடு சென்று அறிவதால் பிணைந்த அன்பு அறுக்கப்படு மென்றும் ஆதலால், அன்பு அற்ந்து நற்பொரு ளறிவதா சிறப்புடைத்தென்றும் வினவி இளமை கழிந்த பின்னர் பயனில்லை என்றியம்பவே ஏகுவதை விடுத்தான் தலைவன்.

விரும்புகிறவர்கட் கின்பம் நல்கும் யாழின் நடுநரம்பு மிழற்றுங்கா லறுந்துவிடும் நிலையற்ற யாழெனும் பொருளா சிறந்ததென்றும், விரும்பிச் சேர்ந்த காலத்துப் போலாது பிறரிகழப் பீடின்றிப் பறந்தோடும் இலக்குமி போன்ற பொருளையா விரும்புவதென்று தலைவி கூறியதும் கட்டுப்பட்டுத் தலைவன் நின்றான். இளமையும் காமமும் காலத்தோடு இருக்கு

மென்றும், காலங்கடந்து இருக்காவென்றும், கடைகாலை யறிய ஒருவாராலும் கூறவியலாதென்றும், ஆதலால் பிரியா திருத்தலே பீடுடைத்தென்று பகர்ந்ததும் தலைவன் செல்ல வில்லை. பிரிவால் தேய்பிறைபோல் எழில் குறையு மென்றும், தாமரை இதழ் உதிர்வதைப்போல் ஆயுள் குறையுமென்றும் குளத்தின் நீர்போல் இளமை குறையு மென்றும் தலைவி கூறவே திருந்திய யாக்கையுள் மருத்துவனின் மருந்து பயனளிப்பதைப் போன்று பயன் நல்கிற்று.

தமிழகத்துத் தலைவியர்களின் உளப்பான்மையை எண்ணிப் பார்க்கையில் அன்பை மறவாது வாழவேண்டுமென்றும், பிரிந்து வாழ்வது செம்மை நெறியைப் பிரிந்து வாழ்வதாகு மென்றும், பிரிவால் எழில் குறையுமென்றும், நற்பொருளினும் கல்வியினும் பொருளினும் எழில் குறையாது அன்பு அகலாது ஒன்றி வாழ்வதே உயர்வுடை வாழ்வென்றும், காதலியுடன் கட்டுண்டு வாழும் வாழ்வு நலம் நிறைந்த நல் வாழ்வென்றும், எதுபற்றியும் பிரிந்து வாழ்வது வாழ்வு அல்ல வென்றும் கூறியதோடல்லாமல், ஒன்றி வாழ்வதால் நற்பொருள்–கல்வி–பொருள்–எழில் இவைகளின் கருவூலங்களாக விளங்கல் பாராட்டற்குரியதே.

விடைபெற்றுச் சென்ற தலைவன் குறித்த காலம் வந்தும் வரவில்லை என்றாலும் இருவரு மின்புற்று வாழ்ந்த ஞான்று ஒப்பற்ற தலைவன், வெம்மை மலிந்த காட்டில் நீரின்றி இடர்ப் படும் காலத்தே ஆண் யானையானது யானைக் கன்றுகள் குடித்துக் கலக்கிய சின்னீரை பெண் யானையைக் குடிப் பித்துப், பின்னர் தான் குடிக்குமென்றும், வெம்மை மிகுந்த காட்டில் பெண் புறாவைக் காப்பான்வேண்டி ஆண் புறா தன் சிறகை விரித்து அந்நிழலில் பெண் புறாவை நிற்க வைத்துக் காக்குமென்றும், கதிரவனின் கொடுமையால் மலைகள் வெப்ப முற்றிருக்கையில் பெண் மானின் துன்பத்தை யுணர்ந்து அதைக் காப்பான் வேண்டி ஆண் மான் தன் நிழலை அளித் துக் காப்பாற்றுமென்றும் கூறியதை எண்ணித் தன்னைத் தேர்வுற வைத்த தலைவியை ஆராயுங்கால், ஒற்றுமை வாழ் வுக்குச் சான்றாகக் கொண்ட சான்றுகள் மெய்ப்பொருளாக விளங்குவதுடன், தலைவனின் தகவுடைமையும் தலைவியின் சால்புடைமையும் பெரிதும் பாராட்டற் குரியதே.

ஒன்றி வாழ்ந்த ஒப்பற்ற தலைவன் பிரிந்த பின்னர் அவர் செல்லும் வழியிலுள்ள வெம்மையின் கொடுமையை யுணர்ந்த தலைவி பெரிதும் வருந்திக் கற்களின்மீதிருக்கும் வெம்மை நீங்கச் சிறு துளிகளைச் சொரிய மேகத்தை வேண்ட உள்ளம் விழைந்தாலும், கணவனிருக்கப் பிறிதொன்றை வேண்டுவது கற்புக் கிழுக்சென்றும், மரக்கிளைகள் வாடும் வெம்மையுடைய கதிரவனின் கொடுமை தணியக் கதிரவனை வேண்டுவது கற்புக் கிழுக்சென்றும், வெப்பம் மாறக் கணவன் மீது காற்றை வீசக்காற்றினைக்கொடுக்கும் செல்வனை வேண்டுதலும் கற்புக் கிழுக்கென்றும் கூறிக், கணவனின் நலத்திலும் கற்பே சிறந்ததென்று உறுதியுட னிருந்ததையறிந்த அறக்கடவுள் கற்பரசியின் வேண்டுகோளை வலிந்து சென்று நிறைவேற்றியதையறியுங்கால் தலைவியி னுள்ளத்தில் நிகழ்ந்த கற்பின் திண்மையும் கற்பறம் பூண்டமையால் அறக்கடவுளே ஆவன செய்தமையும் இனிதே விளங்குவதுடன் கற்புக்குக் கடவுளும் தலைவணங்கியமையால் பொற்புடைய கற்பரசிகளின் பெருமை பாராட்டற்குரியதே.

உள்ளத்தா லொன்றிய காதல ரிருவரையும், காதலியை ஈன்ற பெற்றோர் தேடிச் சென்றுகொண்டிருக்கையில் மும்மலங்களை முற்று மெரித்து கரகத்தையும் முக்கோலையும் சுமந்து குடை ஏந்தி இறைவனன்றிப் பிறிதொன்றையும் நெஞ்சத்தால் நினையாது ஒழுகும் துறவிகளைக் கண்டு இருகாதலர்களைக் கண்டீரோ என்று வினவியபொழுது, பார்க்காம லில்லை என்று பதில் கூறி, தாய் தந்தையர்க் காறுதல் கூறுவான் வேண்டிப் பலனளிக்கும் நறுநாற்றம் நல்கும் சந்தன மரங்கள் அரைத்துப் பூசிக்கொள்பவர்களுக்கே பயன் படுமே அல்லாது அம்மரங்கள் மலைக்குப் பயனில்லை என்றும், அஃதேபோல் பெண்ணும் பிறந்தவிடத் திருந்தால் அம்மரங்கள்போல் பயனில்லை என்றும் ஆதலால் துய்ப்பவனிடம் செல்ல வேண்டுமென்றும், சிறப்புடைய வெண்முத்துக்கள் கடலிலே பிறந்தாலும் கடலுக்குப் பலனில்லை என்றும், என்றாலும் அணிபவர்க்கே அழகு செய்தல் போலப் பெண்ணும் பிறந்த இடம் நீங்கிப், பிறிதொருவனுக் கணியாக இருப்பின் பலனுண்டென்றும், யாழிலே பிறக்கும் ஓசை மிழற்றுபவனுக்குப் பலனாதல் போல ஓசைபிறக்கும் யாழுக்குப் பலனில்லை என்றும், அஃதேபோல் பெண் பிறந்தவிடத்தி லிருப்பின் பலனில்லை என்றும், பிறிதொருவனிடம் வாழ்ந்தே தீரவேண்டு மென்றும் கூறிச்

சுவைத் தமிழ் !

தி. ச. வாசுதேவன், திருச்சி.

இராகம் : அம்சாநந்தி. **தாளம் : ஆதி.**

எடுப்பு.

இனிமைத் தமிழுக்கே இணையேது—உலகில்
என்றனுக்கே உயிராய் இலங்கிடும் தாது (இ)

துணையெடுப்பு.

தனிமையில் இயங்கிடும் ஆற்றலும் உண்டு
தகுதியாய் அதற்கே புரிகுவேன் தொண்டு (இ)

முடிப்பு.

இளமை கொழித்திடும் எழில்மிகும் கன்னி
இன்ப அருவியெனப் பாய்ந்திடும் பொன்னி
வளமை யும்பெருகவே மாண்புடன் உன்னி
மகிழ்வுடன் நாளும் வணங்குவேன் சென்னி (இ)

சிறந்த கற்புடையவளைத் தொடர்ந்து செல்வது துன்பம் விளைவித்ததாகு மென்றும், சிறந்தவனை வழிபடச் செல்லுவதாலும் அதுவே தலையாய அறமென்றும் கூறினர்.

இவ்வழகிய காதற் சித்திரத்தைத் துறவிகள் கூறியதை எண்ணிப் பார்க்கையில், இறையை உள்ளத்திறுத்தித் தெய்வ நெறியிலே சென்ற துறவிகள் கற்பரசிக்கு உயர்வு நல்கியதோடு ஆணும் பெண்ணும் ஒன்றி வாழும் வாழ்வு அறவாழ்வென்றும் தலைவி வழிபடச் செல்லவே தலைவனுடன் சென்றனளென்றும் கூறியதை நுணுகிப் பார்க்கையில், காதலியை உயிராக்கி காதலனைப் பரம்பொருளாக்கி உயிர் இறைவனை ஒன்றுவதைப்போல் தலைவி தலைவனை ஒன்றுகிறுளென்றும், உயிர் இறைவனை ஒன்றி இன்பநிலை எய்துவதைப் போன்று காதலி காதலனை எய்தி இன்புறவேண்டு மென்றும், அதுவே முடிந்த முடிபென் றுரைத்துக் காதல் வாழ்வே கடவுளிடம் சேர்க்குமென்று கூறும் தமிழ் நெறிக் குவமை யுண்டோ ?

பாலைக்கலி, காதலின் கருவூலமாகவும், இயற்கையின் உறைவிடமாகவும் அறத்தின் அணியாகவும் தெய்வீகத்தின் மணிமுடியாகவும் வாழ்வை இன்புறவைக்கும் ஊற்றாகவும் விளங்குவதுடன், வாழ்வுவளமுற-இன்புற-சீர்பெற-இறையை எய்த வழிகாட்டியாகத் திகழ்ந்து தமிழர் வாழ்வியலின் கலைப் பிழம்பாக விளங்குகிறது. வாழ்க பாலைக் கலி! வாழ்க சேரமான் பெருங்கடுங்கோ !!

(216 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தலைவரவர்கள் முன்னுரையில் நாட் சிறப்பை நன்குவிளக்கித் தமக்கும் ஞானியார்க்கும் உள்ள தொடர்பு கூறினார்கள். பின் க. த. ச. பு. க. பேராசிரியர் திரு. ந. இராமநாதன் அவர்கள் 'கலை உரைக்கும் கற்பனை' என்னும் பொருள் பற்றி தக்க முறையில் அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அற்றைநாள் இசையாளர்களை விழாஅமைப்பாளர் வரவேற்க, பல்லடம் திரு. சஞ்சீவி ராவ் அவர்க்ள் வேய்ங்குழல் இன்னிசை நிகழ்ந்தது.

புல்லாங்குழல் இன்னிசையில் மூழ்கி மெய்ம்மறந்திருந்த அவையினர்க்குத் தம்முணர்வு ஊட்டுவது, போல மேல் முகட்டி விருந்து இசை நுகர்ச்சியில் ஈடுபட்டிருந்த கட்செவி யொன்று தன் தலையை நீட்டியது. சிறிது ஆரவாரத்திற்குப் பின் அமைதி நிலவ இன்னிசை பின்னும் நிகழ்ந்தது. விழா அமைப்பாளர் திரு. சஞ்சீவி ராவ் அவர்கட்கும், துணை இசைவாணர்க்கும் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

பத்தாம் நாள் விழா – 23—10—51-செவ்வாய் பெத்தாச்சிப் பெரு வள்ளல் திருநாளாகக் கொண்டாட ப்பெற்றது. நிகழ்ச்சி நிரலிற் குறிப்பிட்டபடி பூண்டி ராவ்பகதூர் திரு. அ. வீரையா வாண்டையார் அவர்கள் தலைமை ஏற்றார்கள்.

புலவர் கல்லூரித் தலைவர் திரு. உ. பழநி அவர்கள் அற்றை நாள் வரை நிகழ்ந்த விழா விவரங்களைத் தொகுத்து அவையினர்க்குக் கூறி, நாட் சிறப்பை விளக்கினார்கள். பின்னர் தலைரவர்களுடைய மரபினர் வாழையடி வாழையாகச் சங்கத் தொண்டில் மனமுவந்து ஈடுபட்டுச் சங்க அலுவல்கள் விழாக்கள் முதலியவற்றைக் குறைவற நடாத்துவிக்கும் முறைகளை யெல்லாம் கூறித் தலைவரவர்களை வரவேற்றார்கள்.

அன்று தினம் முன்னாள் வந்திருக்கவேண்டிய திரு. T. M. பாஸ்கரத் தொண்டைமான் M. A., அவர்கள் சொற்பொழி வாற்றினார்கள்.

தலைவரவர்கள் பின்னுரையைஅடுத்து, கரந்தைக்கவியரசு அவர்கள் விழா நன்றி கூறினார்கள்.

அன்று இசையரங்கு நிகழ்த்த திரு. இசையரசு M. M. தண்டபாணிதேசிகர் அவர்கள், திரு. குடந்தை இராசமாணிக்கம்

பிள்ளை யவர்கள், திரு. அண்ணுமலைநகர் இராம்தாஸ் ராவ் அவர்கள் சென்னை திரு. வீருசாமி யவர்கள், வந்திருந்தனர். விழா அமைப்பாளர் ஏற்ற முறையில் இசைவாணர்களை வரவேற்று முகமன் கூறி, விழா அமைக்கு முன் இசையரசு அவர்களைக் கண்டு பேசியபோதே இசையரசு அவர்கள் அளித்த உற்சாகமும், உறுதியுமே விழா அமைப்பு வெற்றிகரமாக நிறை வேற முதற் காரணம் என்றும், விழா நாட்களை மும்முறை மாற்றி யமைத்தும் மெய் வருத்தம் பாராது இசையரசு அவர்கள் விழாவில் கலந்துகொண்டமையையும் குறிப்பிட்டுச் சிறப்பாகக் கூறியும், விழாவில் கலந்துகொண்ட இசைவாணர்கள் அனை வரும் நம் சங்கத்தின் புலவர்களாக அமைந்து தொண்டுபுரிய வேண்டுமென்றும் கூறினுர். பின்னர் இசையரங்கு நிகழ்ந்தது. விழா அமைப்பாளர் விழா நன்றியும், அற்றை நாள் நன்றியும் கூறினுர்.

திருக்குடந்தை சைவப் புரவலர் திருவாளர் P. S. குமார சாமி செட்டியார் அவர்கள் பட்டம், பரிசுகளை வழங்கினுர்கள். சங்கத்தினர் உறுதி செய்தபடி பின் வருமாறு பட்டங்களும், பதக்கங்களும் பரிசுகளும் வழங்கப்பெற்றன.

1. திருக்குடந்தை சைவப் புரவலர் திரு. குமாரசாமி செட்டி யார் அவர்கள்—சைவத்தமிழ்மணி,
2. செங்கரையூர் திரு. பொன்னணு களத்தில்வென்ருர் —தமிழ்த்தவமணி.
3. மதுரை திரு. இ. மா. கோபாலகிருட்டினக் கோனுர் அவர் கள்—தமிழ்ப்புரவலர்.
4. பல்லடம் சஞ்சிவி ராவ் அவர்கள்—வேய்ங்குழல் நாயகம்
5. திருப்பாம்பரம் திரு. T. சாமிநாத பிள்ளை யவர்கள் —வேய்ங்குழல் நாயகம்
6. கீழ் வேளூர் திரு. மீனுட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் —ஏழிசைச் செல்வர்
7. திரு. இசையரசு M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள் —ஏழிசைச் செல்வர்
8. திருக்குடந்தை திரு. இராசமாணிக்கம் பிள்ளை யவர்கள் —கின்னரி நாயகம்
9. அண்ணுமலைநகர் திரு. இராம்தாஸ் ராவ் அவர்கள் —முழவிசை நாயகம்
10. திருமதி, கொடுமுடி K. B. சுந்தராம்பாள் அவர்கள் —யாழ் மொழிச் செல்வி
11. மதுரை திரு. S. சோமசுந்தரம் பிள்ளை யவர்கள்—இசைமணி

12. பந்தணைநல்லூர் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை—ஆடல் ஆசிரியர்
13. திருமயிலை மணிமேகலை—ஆடல்அரசி
14. திரு. சுலோசனா—ஆடல்அரசி

பதக்கங்கள்.

பாடல். திரு. அண்ணாமலைநகர் வேதவல்லி
ஆடல். 1. திரு. சுலோசனா
,, 2. திரு. மணிமேகலை

பரிசுகள்.

திருமதி. M. S. கர்ந்திமதி
திரு. தங்கவேலுப் பிள்ளை
திரு. லலிதாசுப்பிரமணியம்
திரு. விசுவநாதம் சென்னை
திரு. கீழ்வேளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள்

பொருள்நிலையில் அருகியுள்ள நம் சங்கம் இவ்விழா அமைப்பில் எண்ணி எண்ணியே துணிய வேண்டியதாயிருந்தது.

நம் சங்கத் தலைவர் திரு. இராவ்பகதூர் ஆ. யா. அருளானந்தசாமி நாடாரவர்கள், திரு. V. நாடிமுத்துப் பிள்ளை யவர்கள், திரு. சிவ. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள், திரு. இசையரசு தண்டபாணி தேசிகரவர்கள் முதலியவர்கள் அவ்வப்போதும் வேண்டிய ஊக்கமளித்து விழா அமைப்பதென்று உறுதிகொள்ளச் செய்தார்கள்.

இத்தகைய தமிழ்ப் பெருமக்களுடைய ஊக்கத்தின் பயனாக 5—9—51 அன்றுதான் விழாவைப் பத்து நாட்களுக்கு நடத்துவது என்ற துணிவு கொள்ள இயன்றது. தமிழ் நாட்டின் பல இடங்களிலும் உள்ள இயல், இசை, நாடகப் பெருமக்களும் இவ்விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்ற பரந்த உயரிய நோக்குடன் முயன்றமையால், நிகழ்ச்சிகளை 1—10—51க்குள் திட்டஞ் செய்து அமைப்பது அரிதாயிற்று. எனவே 14-10-51 அன்று தான் விழா தொடங்க இயன்றது. இந்தத் தேதி மாறுதல்களை எல்லாம் ஏற்று விழா முதல் நாளன்று தலைமை வகித்து விழாவைத் தொடங்கி வைத்த திரு. தி. கா. பழநியப்பன் M. A., I. A. S., அவர்களுடைய வாக்கு நலத்தாலேயே விழாவானது பலரும் ஏற்கும் வகையில் சிறப்புற நிகழ்ந்தது என மகிழ்வுடன் கூறுகின்றோம்.

இவ்வாறு அமைந்த விழாவில் பலரும் வியந்து போற்றும் வகையில் நம் அழைப்பிற் கிணங்கி, கலந்து, தலைமையேற்றும் பேருரையாற்றியும், இன்னிசை வழங்கியும், பட்டம் பரிசளித்தும் தொண்டாற்றிய தமிழ்ப் பெருமக்கள் பலர்க்கும் சங்கம்

தனித்தும், தொகுத்தும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

மனமும்மெய்யும் ஒன்றிக் கருமமே கண்ணுயிருந்து உழைத்த அன்பர்களை வாழ்த்திப் பாராட்டுகின்றது.

இன்னும் விழா நடை பேற்றிற்கான பொருள் தாமே வழங்கியும், பிறரிடம் பெற்றுக் கொடுத்தும், உதவிய உள்ளூர் வெளியூர் அன்பகள் அனைவர்க்கும் சங்கத்தின் உளமார்ந்த நன்றியறிவிக்கின்றது.

இவ்வாற்ருல் எல்லாம் பத்துநாள் அளவும் விழா இனிது நடைபெற அருள்புரிந்த தமிழ்த்தாயின் தண்ணருளை வணங்குகின்றது.

இது போலவே இவ்விழா என்ருன்றும் நிகழவேண்டும் என விரும்பும் நன்மக்கள் பெருவிருப்பைஏற்று, அவ்வண்ணமே திருவருள் பாலிக்கும் வண்ணம் இறையருளை வணங்கி வாழ்த்து இன்ருேம்! வாழ்க தமிழ் !!

ஆதீனத் தலைவர்கள் கூட்டுறவு.

நம் நாட்டிலே பல்வேறு கொள்கைகளையுடைய சமய நிலையங்கள் பல உள. அவை சமயத்துறையிலேயன்றி தமிழ்மொழி மேம்பாட்டிலும் ஈடுபாடுடையன. கொள்கைகளில் மாறுபாடு உண்டெனினும் தாம் நல்வழிப்படுத்த எண்ணிய மக்களின் பொதுநல வளர்ச்சியிலும் தாய்மொழி வளர்ச்சியிலும் எல்லா நிலையங்களும் ஒத்துப் பணியாற்றுதல் முறையாகும். கொள்கை மாறுபாடு உண்டெனினும் ஒருவரோடொருவர் மனமாறுபட்டுக் கறுவுகொண்டு கொள்கைகளை நிலைநிறுத்தவேண்டுமென்பதில்லை. எல்லா நிலையங்களும் தம் தம் கொள்கைகளை ஏனைய கொள்கைகளோடு ஒப்பிட்டு ஆராய்தலும் அவ்வாராய்ச்சிகளின் முடிபுகளாக உண்மை காண்டலும் வேண்டற்பாலவாகும். இக்கருத்தினுலேதான் சமய குரவர்கள் "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொருபாகனுர் தாம்வருவர் என்றும்," "விரிவிலா அறிவினுர்கள் வெருெரு சமயம் செய்தே எரிவினுல் சொன்னுரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்" என்றும் அருளியதன் உட்கருத்தாகும். இங்ஙனம் சமய நிலையங்களெல்லாம் ஒன்ருேடொன்று நட்புக்கொண்டு தாம் மேற்கண்ட செயல்களை நிறைவேற்ற

வேண்டிய சிறப்பாக இக்காலத்தில்-இன்றியமையாமையை அவ்வந் நிலையங்களின் தொண்டர்கள் உணர்வாராயினர். இதன் பயனாக சென்ற ஆண்டு நம் கரந்தைத் தமிழ்ச் சங்க அமைச்சர் அவர்கள் முயற்சியினால் திருவாவடுதுறை ஆதீனப் பெருங் குரவராயிருந்த அருட்டிரு அம்பலவாண தேசிக சுவாமிகளும், தருமபுர ஆதீனப் பெருங் குரவ ராகிய சுப்பிரமணிய ஞானசம்பந்த தேசிக சுவாமிகளும் மயூரத்திலும், தருமபுரத்திலும் ஒருவரை ஒருவர் வர வேற்று அளவளாவி சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குதற்கான வகை துறைகளை வகுத்து ஆராய்ந்து கொண்டார்கள். இப்பொழுது 2—11—51ல் தருமபுர ஆதீனத் தலைவரவர்கள் மயிலத்திற்கு இறைவழி பாட்டின் பொருட்டு எழுந்தருளிய பொழுது அவ்விடத்து சிவஞான பாலைய தேசிக ஆதீனத் தலைவர் அவர்கள் தருமபுரத்து சுவாமிகளை வரவேற்று ஆதீனத் தலைவர்களும் அடியார் குழாமும் ஆற்றவேண்டிய பணிகளைக் குறித்து ஆராய்ந்து கல்லூரி மாணவர்கட்கும் பொது மக்கட்கும் நல்லுரை வழங்கினார்கள். இந் நிகழ்ச்சியைக் கண்ட அறிந்த தமிழ் மக்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள். இத்தகைய நல்லுறவும் நற்செயலும் எங்கும் என்றும் பரவி நிலைக்க வேண்டு மெனப் பெரிதும் விழைகின்றோம.

• • • • •

திருக்குறள் சொற்பொழிவுகள்.

இந்நாளில் திருக்குறளின் பெருமையை அறியாதார் இல்லை. இந்நிலை ஏற்பட்டதன் பெருமை திரு. அவிநாசி லிங்கம் செட்டியார் அவர்கட்கே உரியது. திருக்குறளின் கருத்துக்களையும், சிறப்புக்களையும், அறியவேண்டும் என்ற ஆசை எங்குமே நிலவுகின்றது. பள்ளிக்கூடங்களிலும் சரி அறிஞர்களிடையும்சரி, பொதுமக்களிடையும்சரி திருக் குறள் பயில வேண்டும் என்ற ஆவல் மிகுந்து வருகின்றது. இம் முறையே தஞ்சைப் பெருமக்கள் வேண்டுகோட் கிணங்கி மொழியரசி ஆசிரியர் திருவாளர் சாமி. வேலாயுதம் பிள்ளை யவர்கள் தம் முதற் பேருரையில் பொதுவாக திருக்குறளின் சிறப்பியல்புகளை விரித்துரைத்துப் பின்னர் ஒவ்வொரு சனிக்கிழமையும் திருக்குறளின் ஒவ்வொருஇயல் பையும் விளக்கி 1951—அக்டோபர் 17 ஆம் நாள் திருக்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்க
முத்தமிழ் விழா வெளியீடு—1951.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும் முத்தமிழ் விழாவில் முதல் நாள் (14—10—51) தலைமை தாங்கிய தஞ்சை மாவட்டத் தண்டல் நாயகம் திரு T. K. பழநியப்பன் M. A., I, A. S., அவர்கள் ஆற்றிய தொடக்க விழாத் தலைமை யுரையில் பல அரும் பெரும் கருத்துக்கள் பொதிந்திருப்பதால் தமிழ், மக்கள் யாவரும் அறிந்து பயன் பெறுவதற்காக அன்னார் பேசியபோது எடுத்த குறிப்புக்களைக் கொண்டு அச் சொற்பொழிவின் சுருக்கம் அச்சிட்டு வழங்கப் பெறுகின்றது.

சுருக்கம் :

இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பகுதிகளைப் பெற்றிருப்பதால் நம் தாய் மொழி முத்தமிழ் என்று வழங்கப் பெறுகின்றது. தமிழ் மொழியில் உள்ள நூல்கள் கூறும் பொருள்கள் யாவும் அகம், புறம் என்ற இருபெரும் பிரிவில் அடங்கும். வேறு மொழியில் உள்ள நூல்கள்

குறளின் பெருமை என்பது பொருளாகத் தம் 16-ஆவது சொற்பொழிவை கேட்டார் வியந்து போற்றும் வகையில் நிறை வேற்றினார்கள். இந் நிறைவேற்று விழாவிற்கு திருச்சிராப்பள்ளி தமிழர் நாடு ஆசிரியர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதன் அவர்கள் தலைமை தாங்கி திருக்குறளின் மேம்பாடுகளை விளக்கி யாவரும் போற்றும் வண்ணம் திருவிழாவைச் சிறப்புறச் செய்தார்கள். திருக்குறளின் நலன்களையெல்லாம செவ்வனம் ஆராய்ந்து தம் ஆராய்ச்சியின் பலனை தமிழ் மக்கள் எல்லாரும் நுகரத்தந்த திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை அவர்கட்கு தமிழுலகம் பெரிதும் நன்றி பாராட்டும் கட்டுப்பாடுடைத்து. இக்கடமையை தமிழ் மக்கள் நிறை வேற்றியுள்ளார்கள் என்பது இம்முறையில் தமிழ்ப் பெருமக்கள் பலரும் பங்கெடுத்துக் கொண்ட செய்தியே விளக்குவதாகும். இத்தகைய சொற்பொழிவுகள் பல்வேறு இடங்களிலும் நிகழ வேண்டுமென விரும்புவோம்.

—

கூறும் பொருள்களும் இவ் விரண்டு பிரிவினுள் அடங்கு வனவே. இறவாத புகழ் படைத்த நூல்கள் பல நம் செந்தமிழ் மொழியில் உள்ளன. எந் நாட்டவரும் எக் காலத்தும் போற்றும் தலைசிறந்த கருத்துக்கள் அடங்கிய சங்க இலக்கிய நூல்கள் போல் வேறு எந்த மொழியிலும் நூல்கள் இல்லை என்னலாம். அன்பு, ஒழுக்கம், இன்பம், இவைகளை ஒருங்கே ஊட்டுவது தமிழ். நம் முன்னோர்கள் தமிழைத் தெய்வமெனப் போற்றி வந்தனர். (தமிழன் தன் தாய் மொழியை என்று புறக்கணித்தானோ அன்றே அவன் தன்னிலையில் மற்ற நாட்டவர்க்குத் தாழ்ந்தான். தாய் மொழிப் பற்று உண்டாயின் நாட்டுப் பற்றும், மக்கட் பற்றும், சமயப் பற்றும் தாமாகவே உண்டாகும்.)

பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களை யாவரும் எளிதில் உணரும் வண்ணம் எளிய உரைகள் பல வெளி வரவேண்டும். தலை சிறந்த தமிழ் நூல்கள் யாவும் ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் மொழி பெயர்க்கப் பெற்று வெளி வரல் வேண்டும். திருக்குறள், சிலப்பதிகாரம், கலித்தொகை போன்ற சிறந்த தமிழ் நூல்கள் வானொலி நிலையங்களில் அன்றாடப் பாடங்களாக நிகழ்ச்சிகளில் அமைக்கப் பெறவேண்டும். தமிழ்ப் புலமை இல்லாத பலர் இக் காலத்தில் எழுத்தாளர் களாகத் தோன்றியுள்ளார்கள். அவர்கள் வெளியிடும் நூல்கள் தமிழ்ப் புலமையும், கருத்து வளமும், செம்மை யும் இன்றிக் குப்பை கூளங்களாகக் காணப்படுகின்றன. பண்டைக்காலம் போல் நல்லிசைப் புலமை வாய்ந்தவர் களே நூல் எழுத முற்பட வேண்டும்.

தமிழனைப்போல் இசையைக் கையாண்டவர் வேறு யாரும் இல்லை. தமிழன் வாழ்க்கையே இசை மயமானது. ஏர் பிடிப்பது முதல் இறைவனை வணங்குவதுவரை இசை; பிச்சை எடுப்பது முதல் அரசனைக் காண்பது வரை இசை; பிறந்த குழந்தையைத் தாலாட்டுவது முதல் இறந்தோர் பொருட்டு இரங்குவது வரை இசை; எல்லாம் இசை மய மாகவே இருந்தன. நாட்டுப் பாடல்களிலும் கவிதை மணம் கமழ்வதை அறிகின்றோம். தமிழ் நாட்டுப் பெண் களே இசையையும் தமிழையும் வளர்த்தவர்கள் என்ன லாம். இத்தகைய இசை மயமான சூழ்நிலையில் தோன்றி வளர்ந்த தமிழ்மக்கள் நல்லறிவும், ஒழுக்கமும், உடல்

உறுதியும் இன்பமும் ஒருங்கே பெற்றுச் சான்றோர்களாக வாழத்தானே வேண்டும்.

சங்க நூல்களில் காலத்தால் முற்பட்ட நூலாகிய பரிபாடல், இசைப் பாடல்கள் அடங்கிய நூலேயாம். தேவாரம், திருவாய்மொழி முதலியவை கடவுள் மணம் தமிழ் மணத்தோடு இசை மணம் வீசும் நூல்கள் ஆகும். பிற்காலத்தில் தோன்றிய முத்துத் தாண்டவர் கீர்த்தனங்கள், அருணசலக் கவிராயர் கீர்த்தனங்கள், மாம்பழக் கவிராயர் கீர்த்தனங்கள், கவிகுஞ்சரபாரதி கீர்த்தனங்கள், கோபால கிருஷ்ண பாரதி கீர்த்தனங்கள் வேதநாயகம் பிள்ளை கீர்த்தனங்கள் யாவும் தமிழ் இசை உலகில் இடம் பெற்றுள்ளன. தமிழ்மொழியில் இயற்றப்படும் பாடல்கள் யாவும் தமிழ் இசைப் பாடல்கள் என்ற வரிசையில் கொள்ளப்படுவனவல்ல. தமிழிசைமரபுக்கு ஏற்ற வகையில் தமிழ்மொழியில் இயற்றப்படுவனவே தமிழிசைப் பாடல்கள் ஆகும்.

பண்டைத் தமிழ் நூல்களில் காணப்பெறும் நாடக மேடையின் அமைப்பு, நாடகமேடையில் தொங்கவிடப்படும் ஒருமுகஎழினி, பொருமுகஎழினி, கரந்துவரல்எழினி முதலிய பல்வேறு திரைகளின் அமைப்புக்கள், நாடக ஆசிரியன் இயல்பு, குழல் ஆசிரியன் இயல்பு, முழவு ஆசிரியன் இயல்பு, நடிகர் இயல்பு ஆகிய இன்னோரன்ன சில குறிப்புக்களைக் கொண்டே தமிழர் நாடகக் கலையில் தலை சிறந்து விளங்கினர் என்று அறிகின்றோம். தமிழன்தான் நாடகக் கலையை வளர்த்துச் செம்மையுறச் செய்தவன் என்று ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் கூறியது என் நினைவிற்கு வருகின்றது. சங்க நூல்களில் சில பகுதிகளும், ஐந்திணைக் கோவை நூல்களும், திருக்குறள் காமத்துப்பாலும் நாடக முறையிலே காணப்படுகின்றன. பிற்காலத்தில் தோன்றிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் மனோன்மணியம் என்ற நாடகநூலை யாவரும் அறிவர். சென்னை திரு. சம்பந்த முதலியார் அவர்கள் பல நாடக நூல்களை எழுதியும் தாமே அவைகளை நடித்தும் வருகின்றார்கள்.

தமிழ் ஆக்கம்பெறவேண்டுமானால், ஆங்கிலக் கணிதப் பேராசிரியர்கள் போலத் தமிழாசிரியர்களும் மக்களால் மதித்துப் போற்றப் பெற வேண்டும். பண்டைச் சேர, சோழ, பாண்டியர்கள் போலவும், சடையப்ப வள்ளலைப் போல

வும் பெருஞ் செல்வர்கள் பலர் தமிழை வளர்க்க முன் வர வேண்டும். செட்டிநாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் இத் துறையில் ஆற்றியுள்ள தொண்டுகள் பாராட்டற்குரியன. இராசராசன், இராசேந்திரன் முதலிய சோழப் பேரரசர்கள் ஈழம், சாவகம், கடாரம், முதலிய நாடுகளில் தமிழ் மொழி வளர்ந் தோங்கச் செய்தார்கள். அவர்கள் போல இக் காலத்திலும் உலகமெலாம் தமிழ் முழக்கம் செய்யத் தமிழர் கள் முற்பட வேண்டும். இத்தாலியிலும், சீனுவிலும், திபெத் திலும் பல தமிழ்ச் சுவடிகள் இருப்பதாக அறிகின்ரும். கி. பி. எட்டாம் நூற்ருண்டுக்கு முற்பட்ட பல தமிழ் நூல்கள் அச் சுவடிகளில் இருப்பதாகவும் கூறுகின்றனர். அவைகளை எல்லாம் அரிதில் தேடி அச்சிட்டு வெளி வர ஆவன செய்தல் வேண்டும்,

திரு. இராதாகிருட்டினப் பிள்ளை அவர்களால் தோற்று விக்கப் பெற்று, திரு. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களால் கண்ணெனக் காத்து வளர்க்கப் பெற்ற இக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தொண்டுகள் பாராட்டற் குரியன. சென்ற நாற்பது ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் இச் சங்கம் ஆற்றியுள்ள தொண்டுகள் பொன் னெழுத்தில், பொறிக்கத் தக்கன. இப்போது முத்தமிழ்வள்ளல் திரு. அருளானந்தசாமி நாடார் அவர்கள், திரு. தட்சணமூர்த்திப் பிள்ளை அவர்கள், திரு. கந்தசாமிப் பிள்ளை அவர்கள், திரு. கணபதிப் பிள்ளை அவர்கள் முதலிய அன்பர்களால் இச் சங்கத்தின் பணிகள் தொடர்ந்து நடை பெறுகின்றன. இன்னும் பல தமிழறிஞர்களும், பெருநிலக் கிழார்களும் இச் சங்கப் பணியில் பங்கெடுத்துக் கொள்ள முன்வர வேண்டும்.

இன்று முதல் பத்து நாட்கள் வரை முத்தமிழ் விழா இச் சங்கத்தின் சார்பில் நடைபெற இருக்கின்றது. இயல், இசை, நாடகம் முதலிய முத் தமிழ்த் துறையில் முறை போகிய உத்தமப் புலவர் பலர் பங்கெடுத்துக் கொள்ளு வார்கள். சொற்பொழிவுகள், இசை யரங்குகள், நடன நிகழ்ச்சிகள் நடைபெறும். இவைகளைக் கண்டும், கேட்டும் தமிழ் மக்கள் யாவரும் மகிழ்ச்சியும் பயனும் அடைவார்களாக. இவ் விழா இனிது முடிய எல்லாம் வல்ல தமிழ்ப் பெருந் தெய்வமாகிய முருகக் கடவுளை இறைஞ்சுகின்றேன்.